பக்கங்கள்:22 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 06 ஞாயிற்றுக்கிழமை 20.03.2022 கதிர் 135

**இனி இது ரகசியம் அல்ல!**

வங்களா விரிகுடா நாடுகளின் கூட்டுறவுச் செயற்பாட்டை வலுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட 'பிம்ஸ்டெக்' மாநாடு கொழும்பில் நடைபெறப் போவதாகவும், அதில் பங்குபற்றுவதற்காக பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக ☞2

# சர்வ கட்சி மாநாடு; தமிழ் கட்சிகளுக்கு தனித் தனி அழைப்பு

## தமிழரசு பங்குபற்றும் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டியுள்ள மாநாட்டில் பங்குபற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் தனித்தனியாக அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. ☞2

## பஸிலுக்கு நம்பிக்கை தெரிவித்து பிரேரணை

### ஆளுங்கட்சி அதிரடி வியூகம்

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை கொண்டுவருவதற்கு நாம் தயார்.

– இவ்வாறு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என எதிரணி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்குப் ☞2

## காங்கேசன் சிமெந்து ஆலையை நேரில் பார்வையிடுவார் மஹிந்தர்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்வார் என்று தெரிய வந்தது. சேதமடைந்து கைவிடப்பட்டிருக்கும் காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காகவே பிரதமர் அங்கு நேரில் செல்கிறார் என தெரிய வந்தது. ☞2

## மே தினமன்று காலிமுகத்திடலில் 'மாஸ்' காட்டத் தயாராகும் பஸில்!



ஆளும் கூட்டணியின் தலைமைக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மே தினக் கூட்டத்தை காலிமுகத்திடலில் பெருமெடுப்பில் நடத்துவதற்கு அக்கட்சியின் ஸ்தாபகரான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதன்படி ☞2

## 'மொட்டு' அரசுக்குள் மேலும் சிலர் அதிருப்தி; முக்கிய தருணத்தில் வெளியேறத் தீர்மானம்

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிலர், முக்கியமான தருணத்தில் அரசில் இருந்து விலகவுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆட்சியின் கீழ் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பதவிகள் பகிரப்பட்ட விதம் தொடர்பாக இவர்கள் ஆரம்பத்தில் இருந்தே அதிருப்தியில் இருந்து வருகின்றனர். இதன் பின்னர் அரசு பின்பற்றிய கொள்கை தொடர்பாகவும் இவர்களுக்கு அதிருப்தி இருந்து வந்துள்ளது.

இந்தநிலையில், அண்மைக் காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இவர்களின் அதிருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது ☞22

## நல்லூரில் இன்று மஹிந்தவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அழைப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நல்லூர் ஆலய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நல்லூர் ஆலய முன்றலில் இன்று காலை 10 மணியளவில் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் ஆகியன இணைந்து நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் ☞22

## முகப்புத்தகக் காதலால் சீரழிக்கப்பட்ட சிறுமிகள்

முல்லைத்தீவு – புதுமாத்தளன் பகுதியில் இரண்டு சிறுமிகள் கடந்த 16ஆம் திகதி காணாமல் போன நிலையில் அவர்களை தேடும் நடவடிக்கையில் பெற்றோர்கள், ☞22

## புதுக்குடியிருப்புப் பகுதியில் வானில் மாணவன் கடத்தல்!

(சண்முகம் தவசீலன்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தனியார் கல்வி நிலையம் சென்ற வள்ளிபுனம் மாணவன் ஒருவன் வானில் கடத்தி செல்லப்பட்டுள்ளான்.

இவன் கடத்திச் செல்லப்பட்ட வானுக்குள் மேலும் இரு சிறுவர்கள் கை,கால், கட்டப்பட்டு, ☞22

## கியூவில் நின்றவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்

கண்டியில் மண்ணெண்ணையை பெறுவதற்காக நீண்டநேரம் வரிசையில் காத்திருந்த 71 வயது நபர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது அவர் உயிரிழந்திருந்தார் என தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

வத்தேகம – உடதலவின்ன பகுதியை சேர்ந்த 71 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

## விசேட வழிபாடுகளில் மஹிந்தர்; ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மதத் ☞2

### மக்களின் கடும் எதிர்ப்பையடுத்து

## கந்தரோடையில் பௌத்த விகாரைக்கு அடிக்கல் நடும் திட்டம் இடைநிறுத்தம்!




பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கந்தரோடையில் புதிதாக அமைக்கப்படவிருந்த பௌத்த விகாரைக்கு அடிக்கல் நாட்டும் தனது திட்டத்தை மக்களின் எதிர்ப்பையடுத்து கைவிட்டுத் திரும்பினார். ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி கொழும்பு பயணிக்கின்றார் என்றெல்லாம் செய்திகள் வெளியாகின்றனவே. அது என்ன 'பிம்ஸ்டெக்' மாநாடு? அதற்கு இந்தியப் பிரதமர் வருவாரா? – என்ற கேள்விகள் எழுவதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

Bay of Bengal Initiative for Multi - Sectoral Technical and Economic Cooperation (பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்களா விரிகுடா நாடுகளின் கட்டமைப்பு) தான் இது.

இந்த அமைப்புக்கான பெயர் சூட்டலிலேயே ஓர் அரசியல் இருந்தது. முதலில் பங்களாதேஷ், இந்தியா, ஸ்ரீலங்கா, தாய்லாந்து ஆகிய நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பாக இது BIST - EC எனப்பட்டது. நான்கு நாடுகளின் முதல் எழுத்துக்களுடன் பொருளாதார கூட்டமைப்பு என்பதைக் குறிக்கும் Economic Cooperation என்பதன் இரண்டு எழுத்துகளும் சேர்க்கப்பட்டன. சில மாதங்கள் கழித்து 1997 டிசெம்பரில் இந்த அமைப்புக்குள் மியன்மாரும் உள்வாங்கப்பட அதன் முதல் எழுத்தான M அதற்குள் சேர்க்கப்பட்டு அது BIMST - EC ஆனது. கால ஓட்டத்தில் – 2004 பெப்ரவரியில் – நேபாளமும் இந்தக் கூட்டுக்குள் சேர்க்கப்பட்டதும், அதன் முதல் எழுத்தான N யும் சேர்ப்பதா, அதற்காகப் பெயரை மாற்றுவதா என்ற கேள்விகள் எழுந்தன. இப்படி அந்த அமைப்பில் ஒவ்வொரு நாடும் சேரும் போதும் புதிது புதிதாகப் பெயரை மாற்றுவதா என்று எண்ணி, இருக்கின்ற BIMSTEC என்ற பெயரையே தொடர்வது என்றும், அந்த எழுத்துகளுக்குப் புது அர்த்தம் கண்டுபிடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில்தான் பழைய BIMSTEC என்ற பெயருக்கு வங்களா விரிகுடா நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு எனும் தற்போதைய அர்த்தம் கொடுக்கப்பட்டது.

அதில் இந்தியாவுக்கு அதிக ஈடுபாடும், விருப்பும், சம்பந்தமும் உண்டு. அதற்குக் காரணமும் உள்ளது.

தெற்காசிய, தென்கிழக்காசிய நாடுகளைக் கொண்ட அமைப்பு இது. இவ்விவகாரத்தில் தெற்காசிய நாடுகளுக்கான இன்னொரு அமைப்பும் உண்டு. அது 'சார்க்' அமைப்பு.

'சார்க்' அமைப்பில் தனது பரம எதிரியான பாகிஸ்தானோடு சமதையாக அமர வேண்டியுள்ளதே என்ற ஆதங்கம் இந்தியாவுக்கு எப்போதும் உள்ளது. அந்த எரிச்சல் இதே பிராந்திய நாடுகளை உள்ளடக்கிய 'பிம்ஸ்டெக்' இல் இல்லை. ஏனென்றால் இந்தியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தக் கூடிய நாடுகள் இதில் இல்லை.

அதனால், இந்தியாவைப் பொறுத்தவரை 'சார்க்' கைவிட பிம்ஸ்டெக் முக்கியமானது.

அதன் தலைவர்கள் சந்திக்கும் ஐந்தாவது உச்சிமாநாடு வரும் 30ஆம் திகதி கொழும்பில் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் பங்குபற்றுவதற்கு இந்தியப் பிரதமர் நநேந்திரமோடி நிச்சயம் கொழும்புக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு பல தரப்பினரிடமும் உண்டு.

அதற்கான அழைப்பு உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் நேரடியாகக் கலந்து கொள்ளும் தீர்மானம் எதனையும் இந்தியப் பிரதமர் இன்னும் எடுக்கவில்லை.

அவர் பெரும்பாலும் 'சூம்' முறையில் இந்த மாநாட்டில் உரையாற்றுவார் என்று இந்தியாவில் விடயமறிந்த ஊடக வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

★ ★ ★

புதுடில்லி விஜயத்தின் பின் உச்ச மகிழ்ச்சியில் இருக்கின்றார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அவர் வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றார் என்றும் கேள்வி.

'சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?'

ஏற்கனவே பல அத்தியாவசியப் பொருள்களுக்கான இறக்குமதிக்கு முட்டுக் கட்டைகள், இடைஞ்சல்கள், தடைகள் விதிக்கப்பட்டுவிட்டன. பலபொருள்களின் இறக்குமதிக்கு இனி கோட்டா, விசேட அனுமதி, மட்டுப்படுத்தப்பட்ட அளவு அனுமதி என்று பல கட்டுப்பாடுகள் புதிதாக முளைத்துள்ளன.

அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும், அனுமதி அளிப்பதும், கோட்டா வழங்குவதும் பஸிலின் ஆள்களின் கைகளில்.

போதாக்குறைக்கு இந்தியக் கடனுதவியாகக் கிடைக்கும் 190 கோடி அமெரிக்க டொலர் மூலமான இறக்குமதிகளைக் கையாளும் பொறுப்பும் பஸில் 'அண்ட் கோ' கைகளில்தான். இனி, சொல்லவும் வேண்டுமா? பஸிலின் காட்டில் ஒரே மழைதான்.

தன் கட்சி ஆள்களை எல்லாம் வைத்து, இவற்றை எல்லாம் கனகச்சிதமாக கையாண்டு, அந்தப் பின்புலச் செல்வாக்கோடு மாகாண சபைத் தேர்தலை அல்லது உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்து விடும் திட்டமும் பஸில் தரப்பிடம் இருக்கின்றதாம்.

விலைவாசி உயர்வு என்றாலும் வாரிக் கொட்டினால், ஆளும் தரப்பாக இருந்து கொண்டு இலகுவில் வென்று விடலாம் என்று பஸில் கணக்குப் போடுகின்றார் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

எனக்கு என்னவோ 2015 அனுபவத்துக்குத்தான் மீளத் தயாராகுகின்றார் என்று படுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

தென்னிலங்கையர் யாழ்ப்பாணம் வரும் போது நல்லூர், நயினாதீவு, கீரிமலை, கசூர்னா பீச் என்று வெளியில் தெரிய 'விசிட்' அடிப்பார்கள். சத்தம் சந்தடியின்றி அவர்களில் வாயில் அடிபடும் இடங்களும் உண்டு. அவை, அனேகமாக வாலிப வட்டங்களின் பேச்சுகளில் தான் அடிபடும். கூவில், திக்கம் என்பவை அவற்றில் சில.

நமது நாட்டுப் பிரதமரும் யாழ்.வந்துள்ளார். நேற்றும் இன்றும் யாழ்ப்பாணத்தில் நிற்கின்றார். வயது போய் விட்டமையால் இளைஞர் வட்டங்களின் இடம் அவருக்குச் சரிவராது. ஆனால் யாழ்ப்பாணத்து ஒடியல் கூழ் விசேடமாகக் சொல்லித் தயாரித்துப் பெற்று, குடித்து மகிழ்ந்திருக்கின்றார்.

தம்முடைய 'கூழ்' ஆசை பற்றி என்னிடமே ஒரு தடவை அவர் கூறி மகிழ்ந்திருக்கின்றார்.

அது சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அரசு – புலிகள் சமரசப் பேச்சு நடந்த சமயம். எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ.

மஹிந்தருக்கு முன்னுரிமை கொடுப்பதை சந்திரிகா விரும்பாத காலம். அப்போது இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன். அவர் யாழ். எம்.பியும் கூட.

சத்தம் சந்தடியின்றி ஒரு விமானத்தை கொழும்பிலிருந்து பலாலிக்குப் பறப்பதற்கு 'புக்' பண்ணினார் மகேஸ்வரன். காலை நேரம் விமானம் பலாலியை நெருங்கும் போதுதான் அதில் எதிர்க்கட்சித் தலைவரையும் ஏற்றிக் கொண்டு பட்டாளமாக மகேஸ்வரன் பயணப்பட்ட விடயம் ஜனாதிபதிக்குத் தெரியும். மறிக்க முடியவில்லை. விடயம் கைமீறிவிட்டது.

என் நினைவு சரி என்றால், யாழ்.நகரை அண்டி சைவகுருமாரின் ஒரு பணிமனையை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷ திறந்து வைத்தார். அதற்கு யாழ்.நகரில் பேரணியாக மஹிந்ததரை அழைத்துச் சென்றார் அமைச்சர் மகேஸ்வரன். அந்த நிகழ்ச்சி தொடர்பில் பின்னாளில் ஜனாதிபதியாகி விட்ட மஹிந்தர் என்னிடம் கூறிய விடயங்களில் ஒரு சில எனக்கு இன்னும் நன்கு நினைவில் உண்டு.

"கொடி, குடை, ஆலவட்டங்களுடன் என்னை மகேஸ்வரன் சுமார் மூன்று கிலோ மீற்றா தூரம் நடை பவனியாகக் கூட்டிச் சென்றார். யாழ் நகர மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு என்னை வரவேற்றனர். கழுத்து நிறைய மாலை போட்டார்கள். அது எனக்கு அதிசயமாகவும் அப்போது புது அனுபவமாகவும் இருந்தது. அந்த வரவேற்பை எண்ணி இப்போதும் ஆச்சரியப்படுகிறேன். அந்தச் சமயத்தில் மகேஸ்வரன் வீட்டில் அற்புதமான கூழ் பரிமாறினார்கள். அதன் சுவை இன்னும் என் நாக்கில் நிற்கின்றது. அதற்குப் பின்னர் அப்படி ஒரு கூழை நான் குடிக்கவில்லை. ஜனாதிபதி சந்திரிக்காவுக்குத் தெரியப்படுத்தாமல் என்னை அழைத்துச் செல்வதற்காக எங்கள் விமானம் பலாலியில் இறங்கும் வரை – காலையில் இருந்து – எங்கள் அனைவரினதும் தொலைபேசிகளை செயலிழக்கப் பணித்தார் மகேஸ்வரன். அற்புதமான – மனதை விட்டு நீங்காத – ட்ரிப் அது. ஆனால் அடுத்த முறை தேர்தல் பிர சாரத்துக்காக பிழையான தரப்புடன் நான் யாழ் செல்ல வேண்டிய நேர்ந்து விட்டது. மகேஸ்வரனுடன் சென்ற போது மாலைகள் போட்டு வாரி அணைத்து வரவேற்ற தமிழ் மக்கள், அடுத்த தடவை விமல் வீரவன்ஸவுடன் நான் சென்ற போது பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் விளக்குமாற்றைக் காட்டித் துரத்தாத குறையாக எங்களைக் கலைத்தனர். பெண்கள் கூட தும்புக் கட்டைகளுடன் ஆவேசமாக நின்றனர். பிழையான ஆளுடன் அங்கு போய் விட்டேன் என்பதை அப்போது உணர்ந்தேன்." – என்றார் மஹிந்தர்.

அந்தச் சம்பவம் நடந்த போது மஹிந்தர் எதிர்க்கட்சித் தலைவர். பின்னர் அவர் ஜனாதிபதியாகி இப்போது திரும்பவும் பிரதமராகி விட்டார். சுமார் 18, 19 வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம். விளக்குமாறு, தும்புக் கட்டை வரவேற்புக்கான மனநிலை இன்னும் யாழ்ப்பாணத்தில் மாறவில்லை என்பதை மஹிந்தர் உணர்ந்து கொண்டால் சரி...!

– மின்னல் –

---

## சர்வ கட்சி மாநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்த வகையில் தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசு, புளொட், ரெலோ ஆகிய கட்சிகளுக்கும் தனித்தனி அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கு பற்றும் என அதன் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புளொட் தரப்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ரெலோ அந்த சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுமா என்பது தெரியவில்லை.

அரசுக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளாக இருந்து கொண்டு, அரசுத் தலைமையுடன் முறுகிக் கொண்டு நிற்கும், சு.க. உட்பட பதினொரு கட்சிகளுக்கும் கூட தனித்தனியாக அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டும்படி அரசுத் தலைவரிடம் கோரியதே சு.கதான். அதனால் அந்தக் கட்சி அதில் கலந்து கொள்ளும் என்று தெரிகின்றது.

எனினும், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல ஆகியோரின் கட்சிகள் இந்த சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்ற மாட்டா என்று கூறப்படுகின்றது. சில சமயங்களில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கட்சியும் கூட அதைப் பகிஷ்கரிக்கலாம்.

சர்வகட்சி மாநாடு நடைபெறும் 23ஆம் திகதி மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கும் ஜே.வி.பியும் இந்த மாநாட்டில் பங்குபற்றுமா என்பது தெரியவில்லை.

நீதியரசர் விக்னேஸ்வரன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவையும் இந்த மாநாட்டில் பங்குபற்றுமா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

சிறிய கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் தலா ஓர் அழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழரசின் சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தனின் வயோதிப நிலையைக் கருத்தில் கொண்டு, அவருடன் ஓர் உதவியாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வசதியாக தமிழரசுக்கு இரண்டு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என மாநாட்டு ஏற்பாட்டாளர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. பெரும்பாலும் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. சம்பந்தனுடன் மாநாட்டில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாநாடு கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

---

## கந்தரோடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணத்துக்குப் பிரதமர் விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், நேற்று கந்தரோடையில் தொல்பொருட்கள் அமைந்துள்ள பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்நிலையில், கந்தரோடை விகாரையில் பிரதமர் அடிக்கல் நாட்டுகின்றார் எனச் செய்தி வெளியான நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திடீரெனக் கந்தரோடையில் பௌத்த விகாரைக்கான அடிக்கல் நாட்டும் தனது விஜயத்தை இரத்துச் செய்தார்.

இதையடுத்து அப்பகுதியில் பிரதமரது பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கிருந்து விலகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

---

## மே தினமன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காலிமுகத்திடம் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மேதின கூட்டத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசுக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்பதைக் காட்டும் விதமாக மாபெரும் கூட்டத்தைத் திரட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

---

## விசேட வழிபாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்படி நயினாதீவு நாக விகாரை மற்றும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், ஆரியகுளம் நாக விகாரைக்கு சென்று அவர் வழிபாடுகளை மேற்கொண்டார்.

பிரதமரின் வருகையையொட்டி யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதமர் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## பஸிலுக்கு நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பதிலடி கொடுக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டுக்காகப் பாடுபடுபவர். தற்போதைய நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு அவர் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார். பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே அவரின் இலக்கும். இந்நிலையில், அவரின் பயணத்தைக் குழப்புவதற்கு சிலர் முற்படுகின்றனர்.

எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணை அல்ல, நிதி அமைச்சருக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையே கொண்டுவரப்பட வேண்டும். அதனைக் கொண்டுவருவதற்கு நாம் தயார் என்றும் அமைச்சர் சந்திரசேன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று இரவு பலாலியில் தங்கி இருந்த பிரதமர் இன்று முற்பகல் காங்கேசன் சிமெந்து ஆலைக்குச் செல்வார் என கூறப்பட்டது.

# 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் ஏற்றிய கப்பல் நாட்டுக்கு வருகிறது

40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் ஏற்றிய கப்பல், இன்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டை அண்மிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி. ஆர்.ஒல்கா இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கடன் ஒப்பந்தத்துக்கு அமைய மேற்படி கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கப்பலில் அடங்கியுள்ள டீசலை நாளை (திங்கட்கிழமை) தரையிறக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அநாவசியமான முறையில் தேவைக்கு அதிகமாக எரிபொருளைக் கொள்வனவு செய்ததால், அதனை முகாமைத்துவம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஒல்கா குறிப்பிட்டுள்ளார்.


# ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும் திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725



# மாங்கல்யா
## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

### மணமகள் விவரம்

- பிறந்த திகதி - 21.06.1988, மதம் - இந்து, ஜாதி - -V பெண், நட்சத்திரம் - உத்தரம் 1 இல், கி.பா - 102, செவ் - 1 இல், தகைமை - B.A, தொழில் - D.O (Veterinary office), எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்
- பிறந்த திகதி - 14.12.1993, மதம் - இந்து, ஜாதி -V பெண், நட்சத்திரம் - ஆயிலியம் 2 இல், கி.பா - 77, செவ்/சூரி 7 இல், தகைமை - A/L Bio, தொழில் - -, எதிர்பார்ப்பு - வெளிநாட்டு பட்டதாரி மணமகன்
- பிறந்த திகதி - 12.01.1992, மதம் - இந்து, ஜாதி -K, நட்சத்திரம் - உத்தரட்டாதி 4 இல், கி.பா - 17, செவ்/சூரி 2 இல், தகைமை - Food Eng, தொழில் - Company, எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்
- பிறந்த திகதி - 10.10.1990, மதம் - இந்து, ஜாதி -V பெண், நட்சத்திரம் - மிருகசீரிடம் 4 இல், கி.பா - 26, செவ் 8 இல், தகைமை - B.A S.L.A.S, தொழில் - உதவி அரச உயர் பதவி, எதிர்பார்ப்பு - உயர் பதவி மணமகன்
- பிறந்த திகதி - 12.12.1996, மதம் - இந்து, ஜாதி - V பெண், நட்சத்திரம் - பூராடம் 2 இல், கி.பா - 24, செவ் 4 இல், தகைமை - G.C.E A/L, தொழில் - France PR, எதிர்பார்ப்பு - France or இலங்கை படித்த மணமகன்
- பிறந்த திகதி - 12.08.1999, மதம் - இந்து, ஜாதி - V பெண், நட்சத்திரம் - உத்தரட்டாதி, கி.பா - 12, செவ் 3 இல், தகைமை - பட்டதாரி, தொழில் - -, எதிர்பார்ப்பு - வெளிநாட்டு PR மணமகன்
- பிறந்த திகதி - 17.11.1982, மதம் - இந்து, ஜாதி - குருகுலம், நட்சத்திரம் - கேட்டை, கி.பா - 63, செவ் 7 இல், தகைமை - B.Sc, தொழில் - Bank officer, எதிர்பார்ப்பு -அரச சேவை மணமகன்
- பிறந்த திகதி - 07.11.1992, மதம் - இந்து, ஜாதி - குருகுலம், நட்சத்திரம் - உத்தரட்டாதி 3 இல், கி.பா - 56, செவ் 9 இல், தகைமை - B.B.M, தொழில் - Bank officer, எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

### மணமகன் விவரம்

- பிறந்த திகதி - 03.02.1978, மதம் - இந்து, ஜாதி - குருகுலம், நட்சத்திரம் - கேட்டை 3 இல், கி.பா - 41, செவ் - 2 இல், தகைமை - G.C.E A/L Maths, தொழில் -T.O நீர்ப்பாசனத் திணைக்களம், எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள்
- பிறந்த திகதி - 02.10.1979, மதம் - இந்து, ஜாதி -V ஆண், நட்சத்திரம் - அவிட்டம் 2 இல், கி.பா - 66, செவ் - 6 இல், தகைமை - M.C.A, தொழில் - அரச சேவை, எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்
- பிறந்த திகதி - 01.11.1984, மதம் - இந்து, ஜாதி -V ஆண், நட்சத்திரம் - அவிட்டம் 2 இல், கி.பா - 51, செவ் - 7 இல், தகைமை - B.A, தொழில் - D.O அரசசேவை, எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்
- பிறந்த திகதி - 22.04.1984, மதம் - இந்து, ஜாதி -V சைவம், நட்சத்திரம் - உத்தராடம் 1 இல், கி.பா - 12, செவ் 6 இல், தகைமை - H.N.D.A, தொழில் - Management Assiatant, எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள்
- பிறந்த திகதி - 12.04.1985, மதம் - இந்து, ஜாதி -V ஆண், நட்சத்திரம் - பூராடம் 2 இல், கி.பா - 9, செவ் 5 இல், தகைமை - B.Com, தொழில் - Germany PR, எதிர்பார்ப்பு - பட்டதாரி (இலங்கை வந்துள்ளார்)
- பிறந்த திகதி - 02.03.1985, மதம் - இந்து, ஜாதி - P ஆண், நட்சத்திரம் - திருவாதிரை, கி.பா - 23, செவ் 3 இல், தகைமை - B.A, தொழில் - D.O அரசசேவை, எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள்
- பிறந்த திகதி - 13.11.1991, மதம் - இந்து, ஜாதி - V ஆண், நட்சத்திரம் - உத்தராடம் 4 இல், கி.பா - 14, செவ்/சூரி 2 இல், தகைமை - I.T Software, தொழில் - Company Work, எதிர்பார்ப்பு - Eng, Doc பட்டதாரி மணமகள்
- பிறந்த திகதி - 20.11.1986, மதம் - இந்து, ஜாதி -V ஆண், நட்சத்திரம் - திருவாதிரை 1 இல், கி.பா - 55, செவ் 7 இல், தகைமை - G.C.E A/L, தொழில் - France PR, எதிர்பார்ப்பு - France மணமகள் தேவை

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



# அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

075 330 5500, 070 330 5500
076 122 1566

யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை - மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட



# இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



# BRRENS Fashion Planet

Reborn

எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும். பிரத்யேகமான திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.

பிறென்ஸ் பஷன் பிளானட்



ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்

சிவன்கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
075 527 9110
077 332 1937
021 222 2777



# Northern PC Park

BenQ

வடக்கின் கணினிப் பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## எங்களின் பேதமை

நிதி கொள்கைகளின் கையாள்கைகளில் ஒழுக்கமான போக்கு இல்லாமல், பொறுப்பின்றி வெளிநாட்டுக் கடன்களை வாரிக் கொட்டி, அதில் நாட்டைத் தொடர்ந்து நிர்வகித்து வந்த இதுவரை காலமான அரசுகளின் செயல்பாட்டால் தான் நாடு இந்த மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது.

வருடா வருடம் வரவு – செலவுத் திட்டத்தில் கட்டுமட்டு மில்லாத பெரிய தொகை துண்டு விழும்போது அது பற்றிய சிரத்தையே கொள்ளாமல் – கவலைப்படாமல் – வெளிநாட்டுக் கடன்களை கணக்கு வழக்கின்றிப் பெற்று, நாட்டைத் திவால் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன தொடர்ந்து மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த அரசுகள்.

– இப்படிக் குற்றம் சுமத்திருக்கின்றார் 2016 முதல் 2019 வரை சுமார் மூன்றரை ஆண்டுகள் காலம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்த சிரேஷ்ட பொருளியல் நிபுணர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் அதிகாரத்துக்கு வந்த அரசுகள் யாவையுமே நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரமானதாக மாற்றுவது குறித்து கவலைப்படாமல், அரசியல் பிரசாரத்துக்கான விடயமாக நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களைக் கையாண்டமையால்தான் நாடு இன்றைய பொருளாதாரத் தளர்வு நிலையை அடைந்துள்ளது என்று அவர் குற்றம் சுமத்துகிறார்.

அதிகாரத்தோடு சம்பந்தப்பட்டவர்களின் அரசியல் நிகழ்ச்சிநிரல் திட்டங்கள் நாட்டின் பொருளாதார ஸ்திர நிலைமை குறித்து கவனத்தில் கொள்ளவேயில்லை என்ற உண்மையையும் தமக்குரிய சொல்லாடல்களால் நாசூக்காக முன்வைக்கிறார் அவர்.

பொதுத்துறை நிர்வாகங்களில் உள்ள ஊழல்கள் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையிலேயே இந்தக் கருத்துக்களை அவர் முன்வைத்தார்.

ஜனரஞ்சன அரசியல், வசதி, வாய்ப்புகள், நிவாரணங்கள், மானியங்கள், உதவிகள், இலவசங்கள் பற்றிய எண்ண ஓட்டத்தில் மூழ்கி கிடக்கும் நமது வாக்காளர்கள், அரசியல் தலைமைகளின் இத்தகைய பொறுப்பற்ற போக்கால் நாட்டின் பொருளாதாரம் எத்தகைய மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை பற்றி கவலைப்படாமலேயே – பிரக்ஞையற்றே – இருந்து விட்டார்கள் என்பதுதான் உண்மை.

இப்போது நிலைமை கட்டுமீறி தலைக்கு மேல் போனதும் 'குய்யோ, முறையோ' என்று குரல் எழுப்புகின்றோம்.

கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி சுட்டும் ஒரு விடயத்தை நாம் அனைவரும் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

சலுகைகள், கடன்கள், மானியங்கள் போன்றவை தாராளமாகக் கிட்டியமையால் பல தசாப்தங்களாக இலங்கையர்களாகிய நாம் எங்களுடைய வளங்களுக்கும் சக்திகளுக்கும் அப்பாற்பட்ட வாழ்க்கை ஒன்றை – அது பற்றிய பிரக்ஞையின்றி – வாழ்ந்து விட்டோம்.

ஆனால் அதே டாம்பீக வாழ்வுக்கு இனியும் கடன்கள், மானியங்கள், சலுகைகள் இல்லை என்பதையும் –

நமது எல்லைக்கு மீறிய அந்த வாழ்வுக்குரிய கடப்பாடுகளை நாம் இப்போது அப்படியே மீளச் செலுத்தியேயாக வேண்டும் என்பதையும் –

உணர்ந்து கொள்ளும் போது அந்த யதார்த்தத்தை ஏற்க மறுத்துத் துடிக்கின்றோம்.

கடந்த தலைமுறையில் எம் முன்னோரும், இந்தத் தலைமுறையில் நாமும், நமது அடுத்த தலைமுறைக்குத் தேடி வைத்துச் செல்லுகின்ற பின்னடைவு – பிணி – இதுதான்.

இந்த பிணியை நம் மீதும், நம் நாட்டின் மீதும் திணித்த அரசியல் தலைமைகள் குறித்து நாம் இன்னும் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றமைதான் நமது பேதமை, மடமை, அறியாமை எல்லாமே.

# சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் அட்டையும் தட்டுப்பாடு!

## காலாவதியானவைக்கு தற்காலிகமாக ஒரு வருடம் நீடிப்பு

ஒரு வருடத்துக்கு செல்லுபடியாகும் வகையில், தற்காலிகமாக சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் அட்டைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் அட்டைகளை விரைவில் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர், மூன்று மாதங்களில் சாரதி அனுமதிப்பத்திரம் வீட்டிற்கே அனுப்பப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பௌஸர்களுக்கு எரிபொருள் இல்லை விநியோகிக்கும் செயற்பாடும் பாதிப்பு!


எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்திடமிருந்து, கொள்கலன்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றைக் கொண்டு செல்லும் பௌஸர்களுக்கு எரிபொருள் இன்மையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை கனியவள தனியார் பௌஸர்கள் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, இலங்கை கனியவள மொத்த களஞ்சிய முனையத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அந்த சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

அனைத்து கொள்கலன் பௌஸர்களும், எரிபொருளைக் கொண்டு செல்லுவதற்கு தயாராக உள்ள நிலையில், இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு அவசியமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# மாலைதீவில் நீர் விளையாட்டுகளில் குதூகளிக்கும் அமைச்சர் நாமல்!



இலங்கை வரலாற்றில் முதன்முறையாக பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, மாலைதீவில் நீர் விளையாட்டுகளில் ஈடுபட்ட காணொளி வெளியாகியுள்ளது.

இதனையடுத்து அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

மாலைதீவிலுள்ள நீர்விளையாட்டுகளின் பயிற்றுவிப்பாளர் ஒருவர், நாமல் ராஜபக்ஷவின் புகைப்படத்தை வெளியிட்டு, இலங்கை அமைச்சருக்கு நன்றி எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடியால் அடிப்படை வசதிகள் இன்றி இலங்கையர்கள் தவித்து வரும் நிலையில், நாமல் ராஜபக்ஷ மாலைதீவுக்கு விஜயம் செய்ததன் நோக்கம் என்ன என சமூக ஊடகங்களில் பல இலங்கையர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தநிலையில் மாலைதீவு விளையாட்டு துறை அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கிலேயே அங்கு சென்றுள்ளார் என நாமல் ராஜபக்ஷ, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

தனது மாலைதீவுக்கான விஜயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'மாலைத்தீவு விளையாட்டு அமைச்சர் நடத்தும் தேசிய விளையாட்டு விருது வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காகவே ஒருநாள் பயணமாக மாலைதீவிற்குச் சென்றுள்ளேன்.

மாலைத்தீவு இலங்கையின் நெருங்கிய நண்பன் என்பதாலும், விளையாட்டு மற்றும் இளைஞர்களில் எங்களுக்கு நல்ல புரிதல் இருப்பதாலும், கடந்த ஒன்றரை வருடங்களில் பல பரிமாற்றங்கள் நடந்துள்ளதாலும், எதிர்காலத்தில் இன்னும் பல பரிமாற்றங்கள் நடைபெறவுள்ளமையாலும் இந்த விஜயம் முக்கியமானது.

எனது இந்த மாலைதீவிற்கான விஜயத்தால் இலங்கை அரசாங்கத்துக்கு எந்த செலவும் இல்லை. மறைந்து கொண்டு நெருக்கடியை எதிர்கொள்ள முடியாது. மாலைத்தீவில் அதிக வேலை வாய்ப்புகளைப் பெற வேண்டும், இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மாலைத்தீவுஅதிகளவான தொழில் வாய்ப்புகளை வழங்குகின்றது.

மக்களின் விரக்தியை நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால் இந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியப் பொருள் இறக்குமதிக்கான இறக்குமதியாளர்களை பதிவுசெய்ய ஏற்பாடு!

கொழும்பு, மார்ச் 20

இந்திய கடன் முறையின் கீழ், அத்தியாவசியப் பொருள் இறக்குமதிக்கான இறக்குமதியாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்த வருடத்துக்கான இறக்குமதியாளர்கள் பதிவு செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கைக்குக்கு இடையில் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாட்டுக்கு அமைய, அத்தியாவசிய உணவுப் பொருள், மருந்துகள், சீமெந்து, துணி வகைகள், விலங்குணவுகள், விசேட உர வகைகள், தொழிற்சாலைக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களை இறக்குமதியாளர்கள் இதன் போது பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய விரும்பும் இறக்குமதியாளர்கள் www.trade.gov.lk என்ற இணையதளத்துக்கு சென்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும் எனவும் வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 20th of March 2022



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


## Adverb Phrase

An adverb phrase is a prepositional phrase that modifies a verb, an adjective, or an adverb by pointing out where, when, in what way (how), or to what extent.

Examples: We sat on the park bench. (sat where?)

He should arrive within the hour. (arrive when?)

Will you dance with me? (in what way?)

Except for the border, the quilt was finished. (to what extent?)

A. Circle the adverb or adjective phrase in each sentence, then tell what kind it is.

1. Walt scored fourteen points in twenty minutes.
2. The carpenter slipped off the ladder.
3. The Mardi Gras parade goes along Canal Street.
4. Ms. Reyes solved the problem about your claim.



5. The tape pulled a patch of paint from the wall.
6. Many of the viewers responded to the poll.
7. The information in the ad was incorrect.
8. In summer we eat dinner on the porch.
9. The bank served coffee to the customers in line.
10. The paper with no title belongs to me.
11. During the bus ride I talked with my seat mate.
12. The dime slipped between the slats of the boardwalk.
13. Gold and silver jewelry rose sharply in price.
14. Two of the candidates withdrew after the first primary.
15. Few of the landlords live on the premises.
16. The watchdog slept under the counter.
17. People in street shoes aren't allowed in the gym.
18. At the party Ed danced only with Sue.
19. The country of Burma isolates itself from the West.
20. Nobody but Sue could think of a plan like that.



## G.C.E O/L Literature Lumber Room - *By Saki - Summary*

As punishment for unacceptable behavior, Nicholas must stay home while his cousins and brother are treated to a trip to the beach at Jagborough. At breakfast that morning, Nicholas had complained about a frog in his bowl of bread and milk. His aunt thought it was ridiculous, but the frog was actually there: Nicholas had put it in the bowl himself.

Nicholas's aunt—who is actually his cousins' aunt but acts as if she is related to Nicholas—hopes Nicholas will be upset as the carriage leaves for the beach. However, he is upbeat. In fact, his cousin cries loudly in the carriage as it pulls away because she scraped her knee. Nicholas predicts the others will have a bad day.



*Nicholas*

The aunt adds an extra condition to his punishment: he is to stay out of the gooseberry garden. She expects that he will purposely disobey this instruction. Nicholas acts as though the rule upsets him. He then walks toward the doors that open to the gooseberry garden a few times. He hopes to throw his aunt off the scent and make her believe she has to stay outside. In fact, he has no interest in the garden. With his aunt occupied, he puts into action a plan he has been scheming about for ages.

In the library, he climbs up to where his aunt keeps the key to the lumber room—a room that's off-limits to children. He proceeds to open the door to the lumber room, entering and exploring it. He is not disappointed by what he finds. While the rest of his aunt's house lacks anything that could stimulate excitement, the lumber room is a treasure trove beyond imagining. Nicholas studies a large tapestry depicting a deer hunt and predatory wolves, candlesticks shaped like snakes, a teapot that looks like a duck, and a book of illustrated bird pictures. Nicholas spends a while looking at the tapestry. He wonders if the hunter and his dogs would escape from what seems an inevitably grisly encounter with approaching wolves. The man has only two arrows remaining and the nearness of his prey strongly suggests his aim is only reliable at short distances. He also seems not to have noticed the wolves heading his way from the woods.


Nicholas loses himself in the excitement of his discovery and is only taken away from it by the sound of his aunt calling his name. Nicholas replaces the key and goes to the garden, where his aunt, while searching for him, accidentally has fallen into the rain-water tank. She asks him to fetch a ladder from the gooseberry garden. Nicholas quickly reminds her that she forbade him entry to the garden. She says she has changed her mind and he is now free to enter. Nicholas replies that her voice does not sound like his aunt's voice and that he is now suspicious that the Evil One is actually in the water tank, tempting him into the garden.

When Nicholas asks if strawberry jam will be served with tea and the aunt replies affirmatively, Nicholas seizes upon the slip: she must be the Devil since just yesterday he asked for strawberry jam and his aunt told him they were out. However, when he later looked in the cupboard, he saw that there were actually four jars of jam, but since his aunt had said there was none, she must not have known this. Only the Evil One, Nicholas says, could also have known of the plentiful supply of strawberry jam. Nicholas decides not to over-indulge in the luxury of having power over his aunt, so he walks away. Half an hour passes before the maid discovers and rescues the aunt.

After the children return from their trip to Jagborough, teatime is awkwardly silent. The aunt stews in embarrassed muteness resulting from her time stuck in the water tank. The cousins are unhappy and unexcited because the tide was too high to play in the sand. Nicholas also takes tea in silence because he is pondering the story left untold in the moment frozen in time on the tapestry in the lumber room. If the hunter sacrifices the stag to the wolves, Nicholas thinks, the hunter and his dogs just might escape the ravenous pack after all.

**The best way to predict the future is to create it. - Peter Drucker**

# PREPARATION OF OXYGEN FROM POTASSIUM CHLORATE AND MANGANESE OXIDE




**Apparatus:** Hard boiling tube, delivery tubes, gas jar, stopper, retort stand, beehive shelf, water trough.
**Chemicals:** Manganese IV Oxide, Potassium Chl.
**Method:** A known amount of potassium chlorate and a small amount of manganese oxide is put in a hard boiling tube.
The apparatus is set as shown in the diagram above. The mixture is heated.
The manganese oxide acts as a catalyst.

### Observation

Cracking sound occurs. A colourless gas O2.is given off. The gas is collected by downward displacement of water. It is possible to collect the gas by passing it through water because it is slightly soluble in water.
What is the importance of oxygen being soluble in water? Aquatic organisms i.e. fish can obtain the oxygen for respiration or breathing.

### Physical properties of O2.

It is colourless, tasteless, odourless. Chemical Properties

### Test for oxygen

– Relights a glowing splint. O2reacts and turns colourless Nitrogen Monoxide gas into reddish brown Nitrogen Dioxide gas. Nitrogen Monoxide + Oxygen = Nitrogen Dioxide Chemical Properties of Oxygen Gas Metals and non-metals burn in O2to form metal oxides and non-metallic oxides respectively.

### Metals with Oxygen

When burning, Mg is introduced in a gas jar of oxygen. It continues to burn with bright sparkling flame and white solid magnesium oxide remains as a residue. Oxygen with non-metals. Oxygen with sulphur Burning sulphur on a deflagrating spoon is put in a gas jar of oxygen.

### Observation.

Sulphur burns with bright blue flame producing white fumes of sulphur dioxide. The fumes dissolve in water forming a colourless acidic solution. Sulphur Dioxide + Water = Sulphuric Acid


### Charcoal with Oxygen

Red hot carbon on a deflagrating spoon is introduced in a gas jar of oxygen. The charcoal burns with a lot of sparks giving off colourless gas. Carbon + Oxygen = Carbon Dioxide. Carbon Dioxide + Water = Carbonic Acid

### Phosphorus with oxygen

Red phosphorus burns in oxygen with a bright yellow flame producing white fumes. Uses of Oxygen – Used in LD process to manufacture steel. From Magnesium and dilute Hydrochloric acid.

# GERMINATION OF SEEDS




**What is germination?**
The growth of a seed into a young plant or a seedling is called germination.
In this lesson we are going to learn about the growth of a seed into a young plant which is called germination. Learn the lesson and try the 'Quiz' at the end of the lesson to check your knowledge.

**Structure of a seed**
First of all, let's learn the three main parts of a seed. Embryo, Food Store (Stored food), Seed coat. The structure of a seed.

**Embryo -**
This is the tiny plant inside the seed which will develop into the adult plant. It consists of the young root and shoot of the plant.

**Food store**
These are food stored by the parent plant. Also, known as stored food, which is starch. Young plant uses this stored food until it is large enough to make its own food by the process of photosynthesis. (Click to read the lesson Photosynthesis)

**Seed coat**
This is the hard protective outer covering around the embryo and the food store. Seed coat protects the embryo and the food store.
The embryo rests inside the seed until the conditions are right for it to start to grow.
E.g. – Similarly, some seeds can stay in this resting state for hundreds of years.

**Starting to grow**
What is germination? The growth of a seed into a young plant or a seedling is called germination.
**Examples of the conditions (factors) that plants need to germinate**

- *Water – Helps the seed to swell up, so that the embryo can start growing*
- *Warmth – Speeds up and improves the process of germination*
- *Air (oxygen) – Releases energy for the embryo to germinate*

**Steps of Germination**

- *When conditions are right the seed starts to take in water.*
- *As water is taken in, the seed swells bigger and bigger until the coat splits apart.*
- *Air can then get to the seed. So, the oxygen in the air helps the baby plant burn the food packed inside the seed.*
- *Burning the food produces energy. As a result, the baby plant uses the energy to grow.*
- *A tiny root grows downwards whereas a shoot begins to grow upwards.*
- *The shoot develops and reaches toward the light while the root system develops deep in the soil.*
- *The cotyledon later become the first leaves of the seedling when the seed germinates.*
- *Tiny leaves sprout at the end of the shoot letting Photosynthesis to take place. These are called foliage leaves. They give the baby plant energy, until it gets its own green leaves to photosynthesise.*
- *The primary root grows longer and thicker together with the secondary roots. The leaves grow larger.*
- *Finally, More and more leaves grow and the stem becomes thicker and stronger.*

# மருத்துவக் கதிர்



## தூக்கமின்மை பிரச்சினைகளுக்கான காரணங்களும் தீர்வுகளும்



டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு
இந்தியா

தற்கால சமூகம் வயது, பால், அந்தஸ்து வேறுபாடு இன்றி அதிகரித்த உள ரீதியான நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருவது கண்கூடு. அத்தகைய மன ஆரோக்கியமற்ற நிலைமைகள் தான் உடல் சார்ந்த பிரச்சனைகளுக்கு வழிவகுக்குமெனினும் இரண்டையுமிணைக்கும் பாலமாக இருப்பது தூக்கமின்மையே ஆகும். முன்னெப்போதுமில்லாத அளவு தூக்கமின்மை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தூக்கமில்லாத நிலை, ஆழமற்ற உறக்கம் இரவு முழுவதும் மனதை அலைக்கழிக்கும் சிந்தனைகள், நினைவுகள் அனைத்தும் தூக்கமின்மையின் வகைகளே ஆகும். மேலும், தூக்கமின்மையை எண்ணிப் பயந்து தூக்கம் வராதென்ற நம்பிக்கையை மனதில் ஆழப் பதிய வைத்தல் உறக்கமின்மை பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் செயற்பாடு.

இதற்குரிய முக்கிய காரணங்களாக அக, புற, சமூக அழுத்தங்களால் ஏற்படும் பயம், பதற்றம், வாழ்க்கை முறை மாற்றம், இரவு நேரப் பணி (Night shift), நமது உயிரியல் கடிகாரத்தின் சமநிலை குழம்புதல் என பல காரணங்கள் உண்டு. உயிரியல் கடிகாரம் என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான உள்ளக பொறிமுறையைக் குறிக் கிறது. பொதுவாக எல்லா உயிரினங்களும் தத்தமது உயி ரியல் கடிகாரத்தின் தாளத்திற்கேற்ப இயங்கும். இது ஒவ்வொரு உறுப்புகள் சார்ந்த உடல் தேவைகளை காலத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தும்.

உதாரணமாக நண்பகல் நேரம் பசித்தல், இரவுப் பொழுது உறக்கம் வருதல் அனைத்தும் உயிரியல் கடிகாரத்தின் தாளத்திற்கேற்ற எதிர்வினைகள் ஆகும். பகல் பொழுதின் சூரிய வெளிச்சமும் இரவின் நிலவொளியும் உற்சாகமாகச் செயற்படும் நேரத்தையும் உறங்கும் நேரத்தையும் உயிரியல் கடிகாரம் வழியாக உடலுக்கு உணர்த்திக் கொண்டே உள்ளன. ஆனால் தற்போது அதிகரித்த செல்லிடப்பேசி பாவனை கணணிப் பாவனை ஆகியவற்றால் அதன் திரை வெளிச்சம் இது உறக்கத்திற்குரிய நேரமில்லை என்ற பிழையான சமிக்ஞையை மூளைக்கு வழங்கி எம் உயிரியல் கடிகாரத் தொழிற்பாடுகளை குழப்புகின்றன.

இவற்றால் எம் உறக்க நிலை சிதையும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும். இவ்வாறு உறக்கமின்மைக்கான உடனடித் தீர்வு வேண்டி பலர் தூக்க மாத்திரைகளை உள்ளெடுத்தல், குடிப் பழக்கத்திற்கு அடிமையாதல் ஆகிய தவறுகளைச் செய்கிறார்கள். இவை நிலைமையை மேலும் மோசமாக்கும் செயற்பாடுகளாகும். ஆரம்பத்தில் குறைந்த அளவான தூக்க மாத்திரைகள் மற்றும் மதுவிற்கு எதிர்வினையாற்றி உடனடியாக வரும் உறக்கம் நாளடைவில் அவற்றின் அளவை அதிகரித்தும் பயன் இல்லை என்ற நிலையில் கொண்டு சென்று நிறுத்தும். இவை பக்க விளைவுகளுடன் கூடிய தற்காலிகத் தீர்வுகள் மட்டுமே.

இவற்றினை விடுத்து எமது வாழ்க்கை முறையில் சில நல்ல மாற்றங்களை உட்புகுத்துதலே நல்ல ஆரோக்கியமான உறங்கும் பழக்கத்தை கைக்கொள்ள போதுமானது. படுக்கையறை என்பது உறங்குவதற்காக மட்டுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அங்கிருந்து தொலைக்காட்சி. கணணி, நம் சிந்தனையை தூண்டும் புத்தகங்கள் குறிப்பாக கடிகாரம் போன்ற சாதனங்களை அப்புறப்படுத்தி வைத்தல் ஓரளவு நல்ல உறக்கத்திற்கு வழி வகுக்கும். படுக்கையறையில் கடிகாரத்தை வைத்தல் இன்னும் உறக்கம் வரவில்லையே என்ற மன அழுத்தத்தை அதிகரித்து அதன் காரணமாகவே தூக்கமின்மைப் பிரச்சினையை மேலும் அதிகரிக்கும்

மேலும் உறங்கும் நேரம் நெருங்குகையில் படுக்கையறை வெளிச்சத்தை குறைத்தல், உறங்குவதற்கு இரண்டு மணிநேரம் முன்பாவது செல்லிடத் தொலைபேசி பாவனையை முடிந்த அளவுக்கு முற்றாக நிறுத்துதல், தினசரி ஒரு குறிப்பான நேரத்தில் நித்திரைக்கு செல்வதை ஊர்ஜிதம் செய்தல் ஆகியன ஆரோக்கியமான உறக்கத்திற்கு முக்கிய பங்காற்றும்.

தூக்கமின்மைப் பிரச்சினைகளுக்கு மருந்துகள் உள்ளெடுப்பதை விட பல எளிய நடைமுறைத் தீர்வுகள் காணப்



படுகின்றன. நல்ல ஆழமான உறக்கம் வர வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் காலை, மாலை 10 – 15 நிமிடங்கள் நடைப் பயிற்சி மேற்கொள்ளலாம். மேலும் காலை எழுந்தவுடன் ஒரு பதினைந்து நிமிடமாவது நம் உடலில் நன்றாக சூரிய ஒளி படுமாறு நிற்றல், அதிகாலை வெயில் படுமாறு சூரிய நமஸ்காரம் செய்தல். இரவு உறங்க செல்ல முன் சிறிது நேரம் உடலில் நன்றாக நிலவொளியை உள்வாங்கி விட்டு உறங்கச் செல்லல் ஆகியவை எந்தவொரு சிகிச்சையும் இன்றி எம் உயிரியல் கடிகாரத்தின் சமநிலை மற்றும் வினைத்திறனை அதிகரித்து உடலை தானாகவே நல்ல உறக்கத்திற்கு தயார்ப்படுத்தும் முறைகளாகும்.

மேலும் இரவுறக்கத்தின் முன் நம் வீட்டுக் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக விளையாடி, முடிந்தால் நடனமாடி பின் உறங்கச் செல்லல் ஆகியன நம்ப முடியாத அளவு நல்ல பலன்களைக் கொடுக்கும். எமது மன ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் உடலின் நல்லாரோக்கியத்தின் சிறந்த பங்களிப்பை வழங்கும்.

இவற்றையும் தாண்டி உறங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் நன்றாக தாராளமாக வயிறார உணவருந்தி விட்டு உறங்கச் செல்லல் முக்கியமானது. பலர் உடல் எடையைக் குறைக்க வேண்டி இரவுணவைத் தவிர்ப்பது தூக்கமின்மையைத் தூண்டி மேலும் உடல் எடை அதிகரிப்பிற்கு வழி வகுக்கும். ஆனால் இரவுணவில் நெஞ்செரிப்பை ஏற்படுத்தும் பதார்த்தங்களை தவிர்ப்பது நலம் பயக்கும். தொடர்ந்து தூக்கமின்மையால் அவதிபடுபவர்கள் சோடா போன்ற குளிர் பானங்களை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறான முறைகளை விட சிற்சில வீட்டுப் பாவனைப் பொருள்களைக் கொண்டும் தூக்கமின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். உறங்குவதற்கு முன் செலோடேப் / பிளாஸ்திரியில் ஏதாவது விதைகளை (வெந்தயம் மிக நல்லது) முழுதாக பதித்து ஒட்டி அவற்றை எம் கை கட்டை விரலைச் சுற்றி ஒட்டி லேசாக அழுத்தி மசாஜ் செய்து விட்டு உறங்கச் சென்றால் தூக்கம் உடனடியாகவும் நல்ல ஆழமாகவும் வரும். மேலும் கசகசா விதைகளை உரலில் இடித்துப் பொடியாக்கி பாலுடன் கலந்து ஒரு 20 நிமிடம் சுண்டக் காய்ச்சி உறங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பு அருந்தி விட்டு உறங்கினால் நல்ல உறக்கத்தைப் பெற முடியும். இவற்றைத் தவிர ஆயுர்வேதத்தின் மலர் மருத்துவ முறைகள் எந்தப் பக்கவிளைவுகளும் அற்ற விதத்தில் தூக்கமின்மைக்கு மட்டுமன்றி பயம், பதற்றம் அனைத்து பிரச்சினைகளையும் சீராக்குகின்றன.

ஒரு மனிதன் உடல், உள, ஆன்ம ரீதியில் ஆரோக்கியமானவனாகவும் சமநிலை நிதானம் மிகுந்தவனாகவும் திகழ்வதற்கு ஆதாரமாக விளங்குவது, தேவையான அளவு நல்ல ஆழமான நிம்மதியான உறக்கமே ஆகும். போதியளவான உறக்கமின்மை மெல்ல மெல்ல அவன் மன நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி தற்கொலை வரை கூட கொண்டு செல்லும் அபாயகரமான விளைவுகளைத் தூண்டி விடும். எனவே இதை ஒரு சாதாரண பொதுவான பிரச்சினை எனக் கடந்து செல்லாது அதற்கேற்ற முறையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது.

## ஆயுளைக் கூட்டும் உணவுகள்



உணவே மருந்து என்று நம் முன்னோர்கள் கூறினார்கள். அன்றைக்கு அவர்கள் உண்ட ஊட்டச்சத்து மிக்க உணவுதான் இன்றைக்கும் அவர்களின் ஆரோக்கியத்திற்கு காரணமாக விளங்குகின்றது. இன்றைக்கு உள்ள இளம் தலைமுறையினர் மருந்தே உணவு என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் மாறிவரும் உணவுப் பழக்கம்தான்.

புத்தம் புதிய பசுமையான பழங்கள், காய்கறிகள், கீரைகள், தானியங்கள் மற்றும் முளைவிட்ட பயறுகளை “உயிருள்ள உணவுகள்” என்று கூறுகின்றோம். ஏனெனில் அவை சுவாசித்துக் கொண்டே இருக்கின்றன. மனிதனின் ஆரோக்கியம் மற்றும் ஆற்றலுக்குப் பசுமையான உணவு மிக அவசியமானதாகும்.

### உயிருள்ள உணவுகளின் பட்டியல்

கொத்தமல்லி, புதினா, கறிவேப்பிலை, கோஸ், செலரி, கோதுமைப் புல், எலுமிச்சைப் புல் போன்ற கீரைகள்.

கரட், பீட்ரூட், தக்காளி, வெங்காயம், முட்டைக்கோஸ், வெள்ளரிக்காய், ப்ரோக்கோலி, வெண்டைக்காய், முள்ளங்கி, குடைமிளகாய், காலிபிளவர், மஞ்சள் பூசணி போன்ற காய்கறிகள்.

முளைவிட்ட தானியம், பயறு வகை உணவுகள், விற்றமின்கள், தாது உப்புக்கள் மற்றும் அத்தியாவசிய அமினோ அமிலங்களின் உறைவிடமாக உள்ளன.

அந்தந்தந்தப் பருவங்களில் கிடைக்கும் பழங்களைச் சாப்பிடுவது ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

பாதாம், வால்நட், பிஸ்தா உள்ளிட்ட நட்ஸ் வகைகள் மற்றும் ஆளி விதை, சூரியகாந்தி விதை போன்ற எண்ணெய் வித்துக்களில் உயிர்ச்சத்து நிறைவாக உள்ளது. வால் நட் மூளை வளர்ச்சிக்கு பெரும் துணை புரிகின்றது.

சிறு தானியங்களான குதிரைவாலி, கேழ்வரகு, திணை, வரகு, சாமை, கம்பு, பனிவரகு, சோளம் ஆகியவையும் உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும்.

## இலக்கிய நயம்

# நளவெண்பா

● யாழ். மகள் சைந்தவி



நளன் - தமயந்தி இணையரின் காதல் வாழ்வு பற்றிய பாடல் தொகுப்பு தான் நளவெண்பா. என்றாலும், தேனினும் இனிய உவமைகளும், உவமேயங்களும் கொட்டிக்கிடக்கும் சிறப்பு நளவெண்பாவுக்கு உண்டு. புகழேந்தி புலவரின் கற்பனையின் ஆழத்தை ஒவ்வொரு பாடலிலும் உணர்ந்து கொள்ள முடியும்.

நளவெண்பாவின் கலித்தொடர் காண்டத்தில் கானகத்தில் இயல்பாய் நிகழ்ந்த காட்சியொன்றை தன் கற்பனைத் திறத்தால் சாகாவரம் பெற்ற பாடலாக்கி இருக்கிறான் புகழேந்தி புலவன். அந்தப் பாடல்

**மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தை**
**பங்கயம் என்றெண்ணிப் படிவண்டை - செங்கையால்**
**காத்தாளக் கைம்மலரை காந்தளெனப் பாய்தலுமே**
**வேர்த்தாளைக் காணென்றான் வேந்து (184)**

- என்கிறான் புகழேந்தி புலவன்.

கானகத்தில் அழகான, ஒளி வீசக்கூடிய முகம்கொண்ட பெண்ணொருவள், மலர்களைப் பறித்துக் கொண்டிருக்கிறாள். அப்போது, மற்ற பூக்களிலே அமர்ந்து தேன் சேகரித்துக் கொண்டிருந்த வண்டுகள், மலர் பறித்துக் கொண்டிருந்த பெண்ணின் முகத்தைப் பார்க்கின்றன. அடடா...அன்றலர்ந்த தாமரை இங்கிருக்கும்போது சிறு சிறு மலர்களில் நாம் தேன் சேகரிக்கிறோமே... இது தாமரையா? கால் முளைத்த நந்தவனமா? அல்லது பூக்களின் மொத்த உருவமா?, என்று குழம்பிய வண்டுகள், அவளது முகத்தை மொய்க்கத் தொடங்கின. என்ன இது பெரும் சோதனை? என்று பதறுகிறாள் அந்தப் பருவ மங்கை. 'பலாப்பழத்தை ஈக்கள் மொய்ப்பது போல' என்பார்களே. அதுபோல, தாமரை போன்ற அவள் முகத்தை தும்பிகள் மொய்க்கின்றன. அச்சம் கொண்ட அவளோ, வண்டுகளிடம் இருந்து தப்பிக்க எண்ணி, தனது அழகான சிவந்த கைகளால் முகத்தை மூடிக்கொள்கிறாள். அப்போதும் வண்டுகள் விடவில்லை. அவளது கைகளையும் விரல்களையும் செங்காந் தள் மலர்களாக எண்ணி, அவற்றையும் மொய்க்கத் தொடங்கின. அய்யகோ... பூப்பறிக்க வந்த இடத்தில் இத்தனை அக்கப்போரா? என அவள் முகமெல்லாம் வியர்த்து விறுவிறுத்துப் போனாளாம். அவளை நீ பார்த்தாயா? என நளன் கேட்பதாக இந்தப் பாடலை பாடியிருப்பார் புகழேந்தி புலவர். இந்தப் பாடலின் உட்கருத்தை, இப்போதும்கூட திரைப்பட கவிஞர்கள் எடுத்தாண்டு வருகின் றனர். இளங்கம்பன் கண்ணதாசன் அவர்கள்கூட, 'இரு வல்லவர்கள்' என்ற படத்தில் தன் பாடலினூடாக மேலே சொன்ன நளவெண்பா பாடல் வரிகளை பயன்படுத்தி இருப்பார்.

ஜெய்சங்கர், எல். விஜயலட்சுமி நடிப்பில் 1966இல் வெளியான அந்தப் படத்தில் இடம் பெற்ற, 'நான் மலரோடு தனியாக ஏன் இங்கு வந்தேன்' என்ற பாடலை, இப்போதும் புதிதாக காதலைத் தொடங்குவோர் பாடலாம். எல்லா காலத்திற்கும் ஏற்ற பாடல் அது.

# பட்ட மரமும் பச்சைக் கொடியும்

அன்று அருகிலிருந்த மாணவர்கள் அவனுடன் ஒட்டிக்கொள்ளவே இல்லை. நாள்கள் போகப் போக சீலனுக்கு மற்றைய மாணவர்களுக்கும் இடையில் பழக்கம் அதிகரித்தது. ஆனால் விளையாடும் போது சண்டை வந்தால் டேய் இவன் அகதிப் பெடியன்ரா என்று மற்றவர்கள் பிரித்துக் காட்டுவதால் இவனால் மனதளவில் அவர்களுடன் ஒட்ட முடியவில்லை. இப்படியே பாடசாலைக்குப் போவதும் வருவதுமாக நாள்கள் ஓடின.

பாடசாலையில் நிலமை இவ்வாறு இருக்கிறதென்றால் வீட்டிலோ நிலைமை அதைவிட மோசம். சீலன் அடித்த பந்து பக்கத்து வீட்டு வளவிற்குள் தவறிவிழுந்தால் இந்த அகதியளால பெரிய தொல்லை, தம்பி இனிப் பந்து இஞ்சால வந்தா தரமாட்டம். இது அந்த வீட்டுக்காரரின் குரல். சில வேளையில் அந்த வீட்டிலிருக்கும் பையனின் கையில் பந்து அகப்பட்டாலோ அதை வாங்குவது குரங்கிடம் இருந்து தொப்பி வாங்குவதிலும் மோசம். போதாதற்கு பெரியம்மாவின் பிள்ளைகள் எதையாவது சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அதற்கிடையில் போனாலோ சீலனின் பாடு திண்டாட்டம் ஆகிவிடும். உடனடியாக அங்கிருந்து அகன்று போகவும் முடியாது. சாப்பிடுவதை பார்த்துக் கொண்டும் நிற்கவும் முடியாது.

விளையாட்டுப் பொருள்கள் எல்லாம் பெரியம்மாவின் பிள்ளைகளுக்குத்தான் சொந்தம் எனவே விளையாட்டிலும் அவர்கள் வைத்ததுதான் சட்டம். கிராமத்தின் அமைதி, இனிய பந்த பாசங்கள், அன்பான அயலவர்கள், நண்பர்கள், வயல் வேலிகள், தாமரைத் கொடிகளைத் தாங்கிய வண்ணம் நிறைந்திருக்கும். குளங்கள், பச்சைப் புற்களை இச்சையுடன் மேயவரும் ஆநிரைகள், திருவிழாக் காலங்களில் விழாக்கோலம் பூண்டு மனதை அள்ளி எடுக்கும் சாமி ஊர்வலங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அன்பான அரவணைப்பும், இலேசான கண்டிப்பும் தந்து கல்விப் பயிர் செய்யும் மதிப்பிற்குரிய ஆசான்களைக் கொண்ட கல்விக் கூடங்கள் அந்த





எழில் கொஞ்சும் இனிய கிராமத்து மண்ணின் வாசனை கால வெள்ளத்தில் அடிபட்டுப் போய் இன்று அவையெல்லாம் வெறும் கனவுகளாய், நினைவுகளாய் சீலனின் மனதில் நிழலாடின. அவனையறியாமலேயே அவன் கண்களில் ஊற்றெடுத்த கண்ணீர்த் துளிகள் கன்னங்களால் விழுந்து கொப்பியில் ஊறியன.

கடவுளே ஏன் எங்களைப் படைத்தாய்? ஏன் நாங்கள் இப்படி அலைகின்றோம்? மனிதர்கள் அறிவில் வளர்ந்து விட்டார்கள். இது 20ஆம் நூற்றாண்டு நாகரீக மனிதர்கள் வாழும் காலம் என்று படித்ததெல்லாம் பொய்யா? மனிதர்கள் மற்றவர்களுடன் அன்பாகப் பழகுவார்கள் என்பதெல்லாம் பொய்யா? இப்படியே வினாக்கள் அவன் மனதைக் குடையக் குடைய அது கண்களில் இருந்து நீர்த்துளிகள் வெளிப்பட்டன. பாடசாலை முடிவதற்கான மணி அடித்ததும் சீலனும் மற்ற மாணவர்களுடன் பாடசாலையிலிருந்து புறப்பட்டு வீதியால் மெல்ல மெல்ல நடந்து வீடு வந்து சேர்ந்தான்.

புதிய இடம், புதிய நண்பர்கள், புதிய பாடசாலை இப்படி எதிர்பாராமல் திடீரென புதிதானதும் சீலனின் மனதில் இனம்புரியாத பயத்தையும் கலகத்தையும் உண்டு பண்ணின. அம்மா இப்ப எங்கட வீடு எப்படியிருக்கும்? என்று அம்மாவிடம் கேட்பான் சீலன், அது இப்ப தனியத்தான் இருக்கும் சில நேரம் பூமரங்கள் தண்ணியில்லாமல் எல்லாம் பட்டுப்போயிருக்கும் என்று அவனது அம்மா கூறும் போது அக்காட்சி அவன் மனத்திரையில் ஓடும். அப்போது நெஞ்சை இனம் புரியாத கவலை அழுத்தும். அம்மா வேலையாக இருக்கும் போது இக்கேள்வியைக் கேட்டால் சிலவேளையில் பேச்சு விழும். இப்படியே கவலையைச் சுமந்து கொண்டு அந்த நாள்கள் ஓடிக் கொண்டிருந்த போது எவரும் எதிர்பாராதபடி யாழ்ப்பாணத்திலிருந்தும் இடம்பெயர வேண்டி வந்தது.

சீலனின் குடும்பத்தவர்கள் கிளாலியில் படகேறி யாழ்ப்பாணக் கடனீரேரியைத் தாண்டி வன்னியில் ஆலங்கேணியில் வந்து இறங்கினார்கள். அங்கு பாணும் தேநீரும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவனது பெரியம்மா குடும்பத்தினரும் அவர்களுடன் வந்திருந்தனர். அவர்கள் தாம் அப்படியே கொழும்பு செல்கிறோம் என கூறி ஒரு வாகனத்தை வாடகைக்கு ஏற்பாடு செய்து கொண்டு சென்றனர். யாழ்ப்பாணத்தில் நிலைமை சீரானதும் திரும்பிப் போய்விடலாம் என்று வந்தவர்களின் கதை முடியாமல் நீண்டு கொண்டே போனது.

(தொடரும்)



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# சிறுவர் கதிர்

# நடப்பது எல்லாம் நன்மைக்கே!



காட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா, வேட்டையாடச் சென்றபோது, கால் விரலில் அடிபட்டு, விரல் துண்டாகி விட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டுப் பிரஜைகளான மிருகங்கள் கூடியிருந்தன. ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று, சிங்கராஜாவைப் பார்த்து விட்டுத் திரும்பின. சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தது.

அருகே சிங்கராணி, வழியும் கண்ணீரும், சிந்திய மூக்குமாக அமர்ந்து இருந்தது. ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்று கொண்டிருந்தபோது, வரிசையின் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ளநரி, சிங்கராஜாவின் அருகே சென்றதும் பெருமூச்சு விட்டபடி ‘ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே’ என்றது. சிங்கராஜாவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது. நமது காலிலுள்ள ஒரு விரலே போய்விட்டது. இந்தக் குள்ளநரி, நடப்பதெல்லாம் நன்மைக்கே, என்று கூறுகின்றதே.

பிடி அதை அடைத்துவை, குகைச்சிறையில்! எனக் கட்டளை இட்டது சிங்கராஜா. சிப்பாய்க் குரங்குகள் பாய்ந்து, நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன. ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கின்றது என்ற உண்மையைத்தானே சொன்னேன் என்று புலம்பியபடி சென்றது குள்ளநரி. சிங்கராஜாவின் காலிலுள்ள புண் குணமாவதற்கு, மூன்று மாதகாலம் கடந்தது. காலில் ஒரு விரல் இல்லாமையால், சிங்கராஜா கம்பீரமாக நடக்க இயலாமல், நொண்டி நொண்டி நடந்தது.

அதனால் மிருகங்கள் எல்லாம் மறைமுகமாக நொண்டி ராஜா என அழைத்தன. இப்படிச் சிங்கராஜாவை எல்லோரும் கேலி செய்வதைக் கேட்டு, சிங்கராணிக்கு மிகுந்த வருத்தம். என்ன செய்வது? இந்தப் பட்டத்தைச் சூட்டியது எந்த மிருகம் என்பது தெரிந்தால், இளவரசன் சிங்கக்குட்டியிடம் தண்டனை கொடுக்கச் சொல்லலாமே என நினைத்தது. உண்மையில் இப்படி பெயர் வைத்தது, குறும்புக்கார முயல் என்பது எவருக்கும் தெரியாது.

சிறையில் அடைபட்டிருந்த குள்ளநரிக்கு, சைவ உணவே தினசரி ஒரு வேளை தரப்பட்டது. காட்டுக் கிழங்கையும், கனிகளையும், பார்த்தாலே குள்ளநரிக்கு குமட்டிக் கொண்டு வரும், என்ன செய்வது? வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டிவிட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டோமே, என ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது குள்ளநரி. வெகுநாள்களாகியும் குணமாகாமல் காலை நொண்டிக் கொண்டே ஒரு நாள் காட்டில், வெகு தூரம் வேட்டைக்கு வந்துவிட்ட சிங்கம், ஒரு இடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக் குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது.

ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறித் தின்றது. தின்று முடிந்து, ஏப்பம் விட்டபடி திரும்பிய சிங்கம் அந்த இரும்புக் கூண்டில் கம்பிக்கதவால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, திகைத்தது. மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வேதனைப்பட்டது. ஆத்திரத்தில் கர்ஜனை செய்தது. அப்போது கூண்டில் அடைப்பட்ட சிங்கத்தை, தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்துவிட்டது.

இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார், என்றெல்லாம் பேசிக்கொண்டே அரண்மனையை அடைந்தனர். கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர். இதைக்கண்டு வருந்திய அவர்கள், இது ஊனமுற்ற சிங்கம். இதை நம் இளவரசர் விளையாடப் பழக்கப்படுத்த முடியாது. எனவே, இதைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவதே நல்லது என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுவிட்டுத் திரும்பினர்.

சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது. நமது கால் விரல், இல்லாததால்தான் நம்மை விட்டு விட்டார்கள். நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்றைக்கு நரி சொன்னபோது, ஆத்திரப்பட்டு அதைக் கூண்டில் அடைத்தோம். ஆனால் அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது என்றெல்லாம் நினைத்தபடி தனது குகைக்குச் சென்ற சிங்கம், தனது மனைவியிடமும் குட்டிகளிடமும் நடந்ததைச் சொன்னது.

உடனடியாக, சிப்பாய்க் குரங்குகளை அழைத்து, சிறையைத் திறந்து குள்ளநரியை வெளியில் அனுப்புங்கள் என்று உத்தரவிட்டது. அதன்படி சிறையை விட்டு, வெளிவந்த குள்ளநரியை வரவேற்ற சிங்கராஜா, அறிவுக் கடலே, இன்று முதல் நீங்கள்தான் எனது மந்திரி, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது. யார் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்தது.

# தமிழ் படிப்போம் தம்பி



- கந்தவனம் கோணேஸ்வரன் -

தமிழ் படிப்போம் தம்பி
தரணி யாள்வோம் தம்பி
அமிழ்தம் எங்கள் மொழியடா
அவளின் சேய்கள் நாமடா

அகரத்திலே தொடங்குவாள்
னகரத்திலே நிறைவாள்
உயிரெழுத்துப் பன்னிரண்டை
உயிரெனவே கொள்வாள்

மெய்யெழுத்துப் பதினெட்டாம்
உயிரும் மெய்யும் சேர்ந்திட்டால்
உயிர்மெய்கள் தோன்றுமாம்
அவை இருநூற்றிப் பதினாறாம்

ஆய்தம்என்றும் ஒரெழுத்தாம்
அதனோடு இணைந்திட்டால்
அன்னைத்தமி ழாள்எழுத்து
இருநூற்றி நாற்பத்தேழாம்.

குறிலும்நெடிலும் வைத்திருப்பாள்
குற்றெழுத்தும் வைத்திருப்பாள்
வல் மெல் இடை இனமென்று
வகைப்படவும் வைத்திருப்பாள்

தொல்காப்பியம் திருக்குறள்
தொடரும் சங்கப்பாடல்கள்
பல்விதமாய் அறிவுநூல்கள்
படைத்தாளெங்கள் தாயவள்

அவளைக்கற்கத் தொடங்கினால்
அவள்பெருமை புரியுமாம்
உலவும் அன்னை போலவே
உயர்ந்தமொழி இல்லையாம்

# பழமொழிகள்



1. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
3. கரைப்பான் கரைத்தால் கல்லும் கரையும்.
4. கரும்பு தின்ன கூலி வேண்டுமா?
5. ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுப்பதில்லை.
6. பதறாத காரியம் சிதறாது.
7. தன்னைப் போல் பிறரையும் நினை.
8. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
9. இளம் கன்று பயமறியாது.
10. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

# விடுகதைகளும் விடைகளும்

1. பட்டை போட்டு இருப்பான் சாமி அல்ல, மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல அவன் யார்?
அணில்
2. பூவோடு பிறந்து நாவோடு விருந்தாவான் அது என்ன?
தேன்
3. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை அது என்ன?
அகப்பை
4. காதைத் திருகினால் பாட்டுப் பாடுவான் அவன் யார்?
வானொலி
5. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான தீர்ப்பு அது என்ன?
தராசு
6. ஒரு குகை 32 வீரர்கள் ஒரு நாகம் அது என்ன?
வாய்
7. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது அது என்ன?
எறும்பு

# பாலதீவு கடல் கடந்த யாத்திரைத்தல பெருவிழா கரையோர கத்தோலிக்க மக்களை இணைத்தது

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

பாலதீவு புனித அந்தோனியார் கடல் கடந்த தவக்கால யாத்திரைத்தல பெருவிழா இன்று மார்ச் மாதம் 19ஆம் திகதியில் கொண்டாடப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டு எமில் வியார் அ.ம.தி. அடிகளார் பிரெஞ்ச் மொழியில் எழுதிய 'பாலதீவு அல்லைப்பிட்டி மோசசும் பாலைதீவு புனித அந்தோனியாரும்' என்ற ஆக்கம்




கொழும்புத்துறை புனித பிரான் சீஸ் சவேரியார் குருத்துவ கல்லூரியில் மெய்யியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றும் தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளாரால் தமிழ்மொழியாக்கம் செய்யப்பட்டு காலைக்கதிர் தினசரி மற்றும் ஒன்லைன் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழில் கடந்த வாரம் முதல் பகுதி வெளியிடப்பட்டது. அதன் மிகுதியை இன்று பார்ப்போம்.

**எமில் வியார் அ.ம.தி. அடிகளார் எழுதிய கட்டுரை**

அல்லைப்பிட்டி என்னும் கிராமத்திலே பிறந்த மோசஸ் திருமுழுக்குப் பெறுவதற்காக இவருடைய பெற்றோர் குழந்தையை எடுத்துக்கொண்டு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திற்குப் புறப்பட்டனர். கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியாரை நோக்கிய பயணம் ஆரம்பமானது. காற்றின் வேகத்தால் படகு கவிழ யாத்திரிகர்கள் எல்லோரும் கடலில் தூக்கி வீசப்பட்டனர்.

ஆழமற்ற கடல் என்பதால் உயிராபத்து ஏற்படவில்லை. ஒருவாறு படகை நிமிர்த்திக்கொண்டனர். ஒரு மாதம் நிரம்பாத குழந்தை மோசஸ் தன் அணைப்பில் இல்லையென்பதை கண்டுகொண்ட அவரின் தாய் புனித அந்தோனியாரே என் குழந்தையைக் காப்பாற்றும் என்று கதறியழுதாள்.

திடீரென குழந்தை மோசசின் மெல்லிய முனங்கல் சத்தம் படகின் அருகிலுள்ள ஒரு மணல் மேட்டிலிருந்து கேட்டது. இவ்வாறுதான் புனித அந்தோனியார் மோசசை கடலில் மூழ்காது காத்தார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம் நோக்கி மீண்டும் பயணம் ஆரம்பமானது. இவர்கள் அந்தோனியாரின் பாதத்தை வந்தடைந்தார்கள். ஊர்காவற்றுறையில் பலரின் நன்மதிப்பைப் பெற்றிருந்த கோவா நாட்டைச் சேர்ந்த குருவானவர் மோசசிற்கு திருமுழுக்கருளி அவரைப் புனித அந்தோனியாரின் பாதத்தில் ஒப்புக்கொடுத்தார். மோசசை இறைவன் காப்பாற்றியதற்காக ஒரு சில்வர் நாணயத்தை ஒவ்வொரு வருடமும் புனித அந்தோனியாருக்குக் கொடுப்பதாக மோசசின் தாய் வாக்களித்தார்.

நாள்கள் நகர்ந்தன. மோசஸ் வளர்ந்தான். வாலிபனாகி ஓர் கம்பீரமுள்ள மீனவனாக மாறினான். இவன் சவால்கள் நிறைந்த பல கடல் பயணங்களை மேற்கொண்டான். இவனிடம் வீரம் மட்டுமல்ல, விசுவாசமும் மலைபோல் வளர்ந்தது. இவன் வளர வளர, புனித அந்தோனியாரின் பக்தியும் இவனோடு கூடவே வளர்ந்தது. தினமும் புனித அந்தோனியாரின் பிரார்த்தனை செபிப்பது இவனது வாழ்வின் மகிழ்வாக மாறியது. இவ்வாறு தனது உயிர் காத்த புனித அந்தோனியாரின் பிரசன்னமும் நட்பும் இவனது இளமைப் பருவத்தை நிரப்பினர். புனித அந்தோனியாரை நோக்கி செபிப்பதும் அவருக்காக பணத்தைச் சேமிப்பதும் இவனது வாழ்வில் ஓர் பகுதியாக மாறியது.

ஒருநாள் அல்லைப்பிட்டி ஆலயத்தில் ஒரு மூலையிலே தேடுவாரற்று தூசி படிந்த புனித அந்தோனியாரின் திருச்சுரூபத்தின் கதை பற்றி மோசஸ் என்னிடம் கூறினான். இந்தச் சுரூபம்தான் ஆரம்பத்தில் பாலதீவில் வைக்கப்பட்டிருந்த சுரூபம் என்றும் அங்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இந்த அந்தோனியாரின் சுரூபத்தை தரிசித்து தங்கள் மீன்பாட்டுக்காக



வும் பாதுகாப்பிற்காகவும் மன்றாடுவார்கள் என்றும் கூறினான்.

**உண்டியல் களவாடப்பட்டது**

ஒருமுறை பாலதீவு அந்தோனியார் தவக்கால கடல் கடந்த யாத்திரைத்தல உண்டியல் களவாடப்பட்டது. இதைப் பார்த்துக் கோபமடைந்த மோசசின் தந்தை புனித அந்தோனியாரை நோக்கி கோபத்துடன் கதறினான். இங்கிருந்து நீர் என்ன செய்கின்றீர்? இங்கு உமது இருப்பின் அர்த்தம்தான் என்ன? உமக்கு கிடைக்கும் காணிக்கைகளைக்கூட உம்மால் காப்பாற்ற முடியவில்லையா? - இவ்வாறு தனது கோபத்தையும் கவலையையும் கொட்டித் தீர்த்த பின்பு இச் சுரூபத்தை படகிலேற்றி அல்லைப்பிட்டி ஆலயத்திற்கு கொண்டுவந்து சேர்ந்தார்.

பின்பு இச்சுரூபத்திற்குப் பதிலாக இன்னுமோர் சிறிய அந்தோனியார் சுரூபத்தை பாலதீவிற்குக் கொண்டு சென்று வைத்தார். காலப்போக்கில் இப் புதிய சுரூபம் புதுமைகள் செய்யும் சுரூபமாக யாழ் கத்தோலிக்க மக்களையும் ஆயரையும் கவர ஆரம்பித்தது. இதேவேளை பாலதீவிலிருந்து அல்லைப்பிட்டிக்கு மோசசின் தந்தை கொண்டு வந்த அந்தோனியார் சுரூபத்தின் பாதங்களிலிருந்து செபிக்கும் பழக்கத்தை மோசஸ் வளர்த்துக் கொண்டார். இவர் ஒவ்வொரு முறையும் கடலில் மீன் வேட்டையை முடித்துக்கொண்டு அல்லைப்பிட்டி கிராமத்திற்குத் திரும்பி வரும் போதெல்லாம் இச் சுரூபத்தின் முன் செபிப்பது மோசசின் வழக்கமாக மாறியது. இவ்வாறு இவருக்கும் அல்லைப்பிட்டி ஆலயத்திலிருந்த புனித அந்தோனியாருக்குமிடையில் உறவு ஆழமானது.

உண்டியலைக் காப்பாற்றத் தவறிய சிறிய குற்றத்திற்கு 50 வருட அல்லைப்பிட்டி சிறைவாசகத் தண்டனை அதிகம் என்று எண்ணினார் சுழியான் மோசஸ். இனி நான்தான் முன்னின்று காரியங்களை நடத்த வேண்டும், நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். எனவே புனித அந்தோனியாருக்கு பாலதீவில் ஓர் அழகான ஆலயம் கட்டிசிறைப்பிடிக்கப்பட்ட அந்தோனியாரை மீண்டும் இத்தீவிற்கு கொண்டுசெல்வேன் என்று உறுதிகொண்டார்.

**பாலதீவில் ஆலயம் அமைத்தல்**

நினைத்ததைச் சாதிக்க உறுதிகொண்ட மோசஸ் தனது வலைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு 75ஆவது வயதிலே அந்தோனியாரின் துணையோடு யாழ் மேற்றாசனத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று புனித அந்தோனியாரின் பக்தர்களிடம் பாலதீவில் ஆலயம் அமைக்க பண உதவியை நாடினார்.

அந்தோனியாரின் பக்தர்கள் பலர் அள்ளிக்கொடுத்தார்கள். சிலர் அவரை விமர்சித்தார்கள். அவர் சோர்ந்து போகவில்லை. 75 வயதிலும் எடுத்த காரியத்தில் மலைபோல உறுதியாக நின்று 5 வருடங்களில் பாலதீவில் புனித அந்தோனியாருக்கு ஒரு அழகான ஆலயத்தைக் கட்டிக்கொடுத்தார். 50 வருடங்களாக அல்லைப்பிட்டியில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த அந்தோனியார் சுரூபத்தையும் மீண்டும் பாலதீவிற்கு கொண்டுசென்று ஸ்தாபித்தார். இவ்வாறு மோசஸ் தனது உறுதிமொழிகளை நனவாக்கினார்.

1927இல் திருவிழா நாள்கள் ஆரம்பமாகின. அந்தோனியாரை நோக்கிப் பக்தர்கள் பெருக்கெடுத்தார்கள். இவ்வேளையில் யாரும் நினையாதவாறு மோசசின் மனைவி கடும் நோயுற்று நோயில்பூசுதல் திருவருட்சாதனமும் அவளுக்கு வழங்கப்பட்டதென்ற செய்தி பாலதீவிற்குப் பறந்து வந்தது. மோசசின் மனைவி அல்லைப்பிட்டியில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்க பாலைதீவில் மோசஸ் திருவிழா ஆயத்தங்களில் மூழ்கியிருந்தார். தன் உயிர் காத்த அந்தோனியாரைக் கைவிட்டு மனைவியிடம் ஓடுவதா? அல்லது தரித்து நின்று அந்தோனியாருக்குப் பணி செய்வதா? என்ற போராட்டத்தில் தெளிவு பெற்றார்.

தரித்திருந்து திருவிழா நாள்களில் என் அந்தோனியாருக்காகப் பணி செய்வேன் என்று முடிவெடுத்தார். இவர் அந்தோனியாரைப் பார்த்து வேண்டினார். திருவிழா முடிந்து நான் வீடு திரும்பும்வரை என் மனைவியைக் காப்பாற்றும், நான் உமக்குப் பணி செய்யும்போது என் மனைவி இறந்தால் என் மனைவியை உம்மால் காப்பாற்ற முடியவில்லையே என்று எல்லோரும் உம்மைக் கேலி செய்வார்கள் என்றார்.

பாலதீவில் தரித்து நின்று திருவிழாக்களை முடித்த பின்பு நம்பிக்கையையோடு தன் படகை அல்லைப்பிட்டி நோக்கிச் செலுத்தினார். கரை சேர்ந்ததும் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். நோயுற்றிருந்த தன் மனைவி நோய் நீங்கி வீட்டு வாசலில் அவரை வரவேற்று நிற்பதைப்பார்த்து மோசஸ் மெய்சிலிர்த்து நின்றார். - என்று அந்த எமில் வியார் அ.ம.தி. அடிகளார் எழுதிய ஆக்கம் நிறைவுறுகிறது.

**யேசுதாசன் சந்திரன் அடிகளார் தொடர்கிறார்**

எமில் வியார் அ.ம.தி. அடிகளார் எழுதிய அல்லைப்பிட்டி மோசசும் பாலதீவு புனித அந்தோனியாரும் என்ற கட்டுரையை வாசித்து மொழிபெயர்த்த பின்பு நான் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இவரின் 4ஆம் தலைமுறை உறவினரான யேசுதாசன் யூலன் அமலதாசன் என்பவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மோசஸ் பற்றி கேட்ட போது அவர் மோசஸ் புனித அந்தோனியாருடன் நெருக்கமாக வாழ்ந்த ஒரு கிறிஸ்தவன் என்று அல்லைப்பிட்டியின் முதியவர்கள் பலர் பாரம்பரியமாக சொல்லி வந்தமையை நான் கேட்டிருக்கிறேன், இவர் தான் இறந்தபின் தன் உடலை பாலதீவில் அடக்கம் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டிருந்தார், எனவே இவரின் உடன் பிறந்த சகோதரனான சுழியான் மார்க்கு என்பவர்

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

இவர் இறந்த போது இவரின் உடலை மிக சிரமங்கள் மத்தியில் பாலதீவிற்கு எடுத்துச்சென்று புனித அந்தோனியாரின் ஆலயத்திற்கு அருகில் புதைத்தார்கள் என்றும் கூறினார்.

யேசுதாசன் யூலன் அமலதாசன் என்பவருடன் ஏற்படுத்திய இந்த தொலைபேசி அழைப்பின் பின்னர் சுழியான் மோசஸ் பற்றி எமில் வியார் அ.ம.தி. அடிகளார் எழுதிய கட்டுரை மிகைப்படுத்தப்பட்டு கூறப்படவில்லையென நான் அறிந்து கொண்டேன் என மொழிபெயர்ப்பாளர் தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளார் நிறைவு செய்கிறார்.







# உலக நாட்டு தமிழர்களின் நாவிலும் சுவையாய் குடியிருக்கும் மரவள்ளி ஆச்சி

## ரன்சினிதேவி பத்மநாதன்

யாழ்ப்பாணத்தின் குளப்பிட்டி பகுதியில் எந்த விளம்பர பலகையும் இல்லாமல் - அதிக வாடிக்கையாளர்களை வைத்துள்ள ஒரு பெரிய சுயதொழில் முயற்சியாளர்தான் பத்மநாதன் ரஞ்சினிதேவி என்ற மரவள்ளி ஆச்சி - இந்த 74 வயது மூத்த பெண்மணி கிட்டத்தட்ட 12 வருடங்களுக்கு மேலாக மரவள்ளி கிழங்கு சுவையான மொறு மொறு பொரியலில் உலக நாடுகளில் இருக்கும் தமிழர்களின் நாக்குகளையும் கவர்ந்த பெண்மணியாக இருக்கும் சுவையான கைவாண்மை கொண்ட பெண்மணியை காலைக்கதிர் விருந்துக்கதிர் பகுதிக்காக நேர்கண்டுள்ளோம்.

வணக்கம் அம்மா தங்களுக்கு இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள்,தாங்கள் எமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டு இருப்பதற்காக எங்களுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் உங்களைப் பற்றிய சிறிய அறிமுகமொன்றை தர முடியுமா?

தங்களுக்கும் என்னுடைய இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் எனது பெயர் பத்மநாதன் ரஞ்சனிதேவி. எனக்கு வயது 74. எனது வசிப்பிடம் கொக்குவில் ஆகும். எனக்கு எப்போதும் வேலை செய்து கொண்டிருக்கும் பழக்கம் சிறுவயதில் இருந்தே உண்டு. இதனாலோ என்னவோ தெரியவில்லை எனக்கு ஆரம்ப காலத்தில் தொழில் அமையாவிட்டாலும் பிற்காலத்தில் இத்தொழில் அமைந்துவிட்டது. இதற்கு எனது விடாமுயற்சியும் பொறுமையும் காரணமாகும். மக்களும் ஊடகங்களும் எனக்கு இவ்வாறாக ஆதரவுகளை தொடர்ந்து வழங்கி என்னை உற்சாகப் படுத்திக் கொண்டுள்ளனர். எனது கடமையை சரிவர செய்கிறனே தவிர வெற்றியைத் தேடி நான் போவது இல்லை அதற்கான அகங்காரமும் என்னிடம் இல்லை.

**இந்த வெற்றி எவ்வாறு உங்களுக்கு கிடைத்தது இதற்காக உங்களுடைய பலமாக நீங்கள் கருதுவது என்ன?**

நான் தொழிலை ஆரம்பித்து 12 வருடகாலம் ஆகிவிட்டது இருப்பினும் 4,5 வருட காலத்துக்கு முன்னர் தான் என்னால் இத்தொழிலில் பிரகாசிக்க முடிந்தது. எவ்வளவு காலம் எடுத்தாலும் நான் முன்னேறி வர முடியும் என்ற நம்பிக்கையுடன் ஒரு தொழிலை தொடங்கிசெய்ய வேண்டும்என்பதற்கு நான் உதாரணம். என்னால் இது முடியும் என்ற நம்பிக்கை நமக்கு எப்போதும் வேண்டும் எந்தத் தொழில் செய்தாலும் அதை நாம் அவமானமாக நினைக்கக் கூடாது. அது எவ்வளவு காலம் எடுத்தாலும் என்னால் இந்தத் தொழிலில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் எப்போதும் இருக்க வேண்டும். சிலருக்கு என்னைப் போன்று தொழில் தொடங்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட போதிலும் அவர்கள் உடனடியாக தமக்கு வெற்றி கிடைக்கவில்லையே என்று நினைத்து தொழிலைக் கைவிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே விடாமுயற்சி என்பது எப்போதும் தேவை.

**சுயதொழிலில் ஈடுபட விரும்பும் பெண்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

வெற்றி தோல்வி என்பது சகஜம் தான் வெற்றியை எவ்வாறு நாம் ஏற்றுக் கொள்கிறோமோ அதே போல் தோல்வியையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். தோல்வி சுயதொழிலில் ஏற்படலாம், இருப்பினும் நாம் சுய தொழிலை ஒரு சவாலாக தொடங்கினாலும் மனதளவில் துவண்டு போகாமல், மன சங்கடங்கள், எதிர்ப்புகள் வந்தாலும் அதனைக் கடந்து வெற்றிப் பாதையில் போக வேண்டும். நாம் செய்யும் தொழிலை அவமானமாக என்னாது என்ன தடங்கல்கள் வந்தாலும் அதனை என்னால் நன்றாக செய்ய முடியும் என்னால் இத்தொழிலில் முன்னேற்றம் பெற முடியும், வெற்றிப் பாதையில் இத்தொழிலை என்னால் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கையுடன் எப்போதும் நடக்க வேண்டும், எத்தனை தடைகள் தோல்விகள் ஏற்பட்டாலும் அதனை நாம் சமாளித்து நடக்க வேண்டும். இத்தொழிலுக்கு நான் வந்த பிறகு எத்தனையோ நாள்கள் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன, அத்துடன் மரவள்ளிக் கிழங்கின் விலையும் ஒரு காலத்தில் உயர்வாகவும் ஒரு காலத்தில் குறைவாகவும் காணப்படும், இருப்பினும் எனக்கு நஷ்டம் ஏற்பட்ட போதிலும் கூட நான் இத் தொழிலை விடாமுயற்சியுடனும் ஒரு நாள் நிச்சயம் தொழிலில் முன்னுக்கு வர முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டமையால் மட்டுமே இவ்வாறு மரவள்ளி ஆச்சி என்று சொல்லி எல்லோரும் இன்று இந்த கடைக்கு வந்து மரவள்ளிக்கிழங்கு பொரியல் வாங்கி நான் வெற்றியை அடைவதற்கு ஊக்கம் தந்தார்கள். எனக்கு மக்களும் ஊடகங்களும் பெரும் துணை புரிந்துள்ளன.

**தற்காலத்தில் தாங்கள் சந்திக்கும் சவால்?**

தற்போது எரிவாயு தட்டுப்பாடு காணப்படுவதனால் நான் மின்சாரத்தை நம்பியே இயங்கிக் கொண்டு இருக்கிறேன் ,தற்போது மின்சாரமும் தடைப்படுவதால் என் வேலைகள் காலதாமதம் ஆகி நடைபெறுவதும் இடையிடையே நடைபெறாமல் இருப்பதும் நான் சந்திக்கும் சவால்கள். இருப்பினும் இந்த ஆச்சியின் கடையை நம்பி வரும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது நம்பிக்கையை நான் காப்பாற்ற வேண்டும் என்பதனால் கடமையை நான் சரிவர செய்து வருகின்றேன்.




# காளான் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

காளான் என்பது மண்ணில் வளரும் ஒரு பூஞ்சைத் தாவரமாகும். உலகின் பல்வேறு நாடுகளில் விரும்பி சாப்பிடப் படும் உணவான காளான் எல்லா வித சூழ்நிலைகளிலும் வளரக் கூடிய தாவரமாகும். உலகின் பல நாடுகளில் காளான் முறையாகப் பயிர் செய்து உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது இவை குடிசைத் தொழிலாக, செயற்கையாகவும் உற்பத்தி செய்யப்படுகிறது. காளான்களில் பல்வேறு வகைகள் உள்ளன. ஆனால் அவற்றில் ஒரு சில மட்டுமே சாப்பிடுவதற்கு உகந்தது. பல காளான்கள் நச்சு தன்மை கொண்டவையாக உள்ளன.

காளான் நோய் எதிர்ப்பு திறனை அதிகப்படுத்துகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ப்ளோரிடா பல்கலைக் கழகத் தில் நடந்த காளான் பற்றிய ஆய்வில், 4 வாரங்கள் இந்த காளான் உணவுகளை சாப்பிட்டுவந்தால், ஒரு மாதத்தில் ஆரோக்கியம் மேம்படும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.



1. காளான் இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப் படுத் தும் தன்மை கொண்டது.

2. காளானில் உள்ள தாமிரச் சத்து இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சரி செய்யும் தன்மை கொண்டது.

3. காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும்.

4. காளனானது மலட்டுத் தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

5. காளான் எளிதில் ஜீரணமாகும் தன்மையை கொண்டது.

6. மலச்சிக்கலைத் தீர்க்கும் அற்புத மருந்தாகும்.

7. மெலிதான உடல் அமைப்பை கொண்டவர்கள் தினமும் காளான் சூப் சாப்பிட்டு வந்தால் விரைவில் உடல் பலம் பெறும்.

8. இரத்த சோகை கொண்டவர்கள் காளானை சாப்பிட்டு வந்தால் உடலில் இரத்த சிவப்பணுக்கள் எண்ணிக்கை அதிகரித்து இரத்த சோகை குறைபாடு நீங்கும்.

9. சர்க்கரை நோய் உடையவர்கள் காளான் சாப்பிட்டுவந்தால் உடலில் சர்க்கரையின் அளவு சரியான விகிதத்தில் கட்டுப்படுத்தப்படும்.

10. காளான் அதிகம் சாப்பிடுபவர்களுக்கு கொலஸ்ட்ரால் பிரச்சினை ஏற்படாது.

ஆனால் - காளான் தாய்ப்பாலை வற்றவைக்கும் தன்மை கொண்ட தால் பாலூட்டும் பெண்கள் காளான் உண்பதைத் தவிர்ப்பது நல்லது. சில வகை காளான்களை மட்டுமே உண்ணலாம். சிலவகை காளான்கள் போதையை உண்டாக்கும் தன்மையை கொண்டது. மேலும் சில வகை காளான்கள் பயங்கர விஷத் தன்மை கொண்டவையாகும். ஆனால் இவை பார்பதற்கு ஒன்று போலவே தோன்றும். ஆகவே, கவனமாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்கவேண்டும்.



# கலைக் கதிர்



# மௌனத்தின் மீது வேறொருவன்

## விமர்சனம்




இலக்கியத்தின் மீதான தொடர்ச்சியான இயங்குதல் என்பது சிலருக்கே வாய்த்திருக்கிறது. அந்த வகையில் கவிஞர் கருணாகரன் மிக முக்கியமான கவிதைசொல்லியாக இருக்கிறார். இவரின் தொடர்ச்சியான இயங்குதலை நான் சுட்டிக்காட்ட வேண்டியமைக்கான காரணம் அவர் ஒரு காலக்கவிஞனாக இருப்பதுதான்.

ஈழத்தமிழர் போராட்டம் முகிழ்ந்த எண்பதுகளில் தொடங்கி இன்றுவரைக்கும் தான் எதிர்கொண்ட சூழலின் யதார்த்த நிலைகளை படைப்புக்களில் கொண்டு வருதலினால் அவரை காலக்கவிஞன் என கூறுதல் மிகையல்ல எனவே நினைக்கிறேன். வன்னி மண்ணில் கிளிநொச்சியில் வாழும் கவிஞர் கருணாகரன் இலக்கியத்திலும் பொதுவெளியிலுமாக பல தளங்களில் இயங்கினாலும் அவரை கவிஞனாகவே நான் அடையாளம் காண்கிறேன். அவரது மௌனத்தின் மீது வேறொருவன் தொகுதி தாயதி வெளியீடாக இப்போது வெளியாகியுள்ளது.

**யாரிடமும் தர முடியாத**
**வரத்தின் முன்னே**
**நிற்கும் குழந்தையானேன்**

நிறங்கள் குறித்து நீளும் ஒரு கவிதையின் இறுதிப் பகுதி இது. கவிஞனுக்கு வரமாகவோ இனாமாகவோ மஞ்சள் நிற கொண்டற்பூக்கள் கிடைக்கின்றன. ஆனால் அந்த நிறத்தை தேர்வு செய்தவர் யாருமில்லை. அதை யாரிடம் தருவது என்ற மயக்கத்தில் எழுந்த வரிகளே மேலேயுள்ளது. வரிகளை உன்னிப்பாக கவனிக்கையில் கவிதை சொல்லியின் பாத்திரம் எதுவென அடையாளம் காண முடியாமல் ஒருவித இருண்மை நிலை வாசகனுக்கு நேரிடுகிறது. இதுவே கவிஞனின் சொல் விளையாட்டு.

மாதவியை தேடும் கோவலர்கள் இருக்கும் வரைக்கும் கண்ணகிகள் யுகம்தோறும் தோன்றிக்கொண்டேயிருப்பர். ஆக கண்ணகி ஒருத்தியல்ல எனக்கூறுகிறது இன்னோர் கவிதை.

**பொறுத்தலின் எல்லை**
**இனிப்போதுமென்று எண்ணியபோது**
**முலைகளில் தீ கனன்றது**
**உதடுகள் நெருப்புத் துண்டங்களாயின**
**இதயத்தில் தீ மூண்டது**
**யோனி தீக்குளியாயிற்று.**

**நெருப்பாகி சுடர்ந்தாள்**
**தேவதை.**
**ஆயிரமாயிரம் கைகள் தொழ**
**ஒரு தெய்வம் தோன்றியது**
**நம் முன்னே**

இந்த கவிதையும் வாசகனின் ஊகங்களுக்கே முடிவினை விட்டு விடுகிறது அவரது பெரும்பாலான கவிதைகள் போல. ஆனால் தனக்கேற்பட்டட அவலத்துக்கு நகரையே எரித்து சாம்பலாக்கிய தொன்ம பெண் போலன்றி தன்னையே எரித்த இவளும் கூட தெய்வமாக்கப்படுவது அனிச்சையாக நிகழும் ஒன்றன்று. மாறாக தொன்மங்களை மீள மீள வாசிப்பு செய்தலினூடாக வெளிப்படும் இனி ஒரு புதுவிதி செய்தல் எனக் கூறுகிறார் கவிதை சொல்லி.

**அவளுடைய அந்தரங்கத்தில்**
**குழந்தைகளுக்கான முத்தமும்**
**முதியோருக்குமான முத்தமும்**
**தனித்தனியாக பத்திரப்படுத்தப்பட்டுள்ளது.**
**உனக்கும் எனக்குமான**
**முத்தத்தை தந்துவிட்டாள்**

முத்தம் அன்பின் வெளிப்பாடு என்பதை மீள்பரீசீலனை செய்கிறார் கவிதைசொல்லி இந்த கவிதையில். வாழ்க்கை போராட்டத்தில் முத்தங்களை விற்று முக்குளிப்பவளுக்கும் கூட அந்தரங்க முத்தங்கள் பிரத்தியேகமாக உள்ளன என்பது வலுவான குறியீடாகிறது கவிதையின் போக்கில். இறுதியில் அவளும் கூட தெய்வமாகிறாள்.

**முன்பு அவள் எரியும் நெருப்பு**
**இப்போதவள் தணிந்த சுடர்.**
**ஒரு தெய்வம்**
**ஒளி கொண்டது என் முன்னே**

மனித வரலாறு என்பது தனியே மனிதர்களால் நிரம்பிய ஒன்றன்று. மனிதர்கட்கும் பிராணிகட்கும் இடையிலான இடையூடாட்டம் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் ஒன்றே. ஒரு குழந்தைக்கும் நாய்க்குமான உறவு குறித்து உசாவுகிறது இன்னோர் கவிதை. ஆனால் பருவமாற்றங்கள் குழந்தைக்கும் நாய்க்குமிடையிலான விளையாட்டில் பிரிகோடொன்றை கீறி விடுகிறது. அதை நாய்க்குட்டி தனது நோக்கினூடே வெளிப்படுத்தி முதுவேனிலை குற்றவாளியாக்கி விடுகிறது இப்படி.

**பிறகெப்படி முதுவேனிற் காலத்தில்**
**கடவுளின் பரிசு**
**வினோதமாக மாறுகின்றதென**
**நாய்க்குட்டிக்கு விளங்கவேயில்லை.**

**கடவுளின் வஞ்சனையை**
**புரிந்து கொள்ளவே முடியவில்லை**
**அதனால்**

144 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் நூற்றியேழு கவிதைகளை காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு விதம். தான் வாழும் காலத்தை தனக்கேயுரிய மொழியில் எளிமையாக கூறவரும் கருணாகரன் அவர்களின் இந்த தொகுதி உன்னிப்பாக வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

**- தி.லலிதகோபன் -**

# இனி வாழ வழியில்லை

**தொடர்ந்து வாழ விருப்புமில்லை**
**பிடிப்புமில்லை மனிதருக்கு**
**தொடரும் வாழ்வில் உண்டு வாழ**
**எதுவுமில்லை எல்லாம் விலை**
**அத்தியாவசிய பொருட்களின்**
**விலைகளிலோ தொடருதே ஏற்றம்**
**மனிதரின் அன்றாட வாழ்க்கையிலே**
**அடிக்கடி நிகழுதே மாற்றம்**

**அரிசி விலையும் ஏற்றம்**
**பால்மா விலையும் ஏற்றம்**
**எரிபொருள் - எண்ணெய்**
**உரத்தின் விலையும் ஏற்றம்**
**புரியவில்லையே புதியவிலைகள்**
**புது விதமாய் ஏறுகிறதே**
**தெரியவில்லையே இத்தரை மீதே**
**எப்படி வாழ்வோம் மாந்தர் நாமே**

**நல்லதை வாங்கி சமைத்து**
**உண்ட காலம் கனவாய்ப் போச்சு**
**நெல்லை விதைத்து மகிழ்ந்த**
**வாழ்வு இல்லையென ஆச்சு**
**கொல்லையுட் புழுக்கள், பூச்சிகள்**
**கோதிய கறிகள் வாங்கி**
**அல்லலும்நோயுமுற்றுநாம் அலைகிறோமே**
**விலைகளின் ஏற்றத்தாலே**
**இனி வாழ வழியில்லை**

**சம்பூரணி - சுஜந்தினி யுவராஜா**

# அழியாத கோலங்கள்

**சுருதி.ரகுபதி**

**வரைந்த விதவைக் கோலம்**
**அவள் அணிந்த பூக்களின் நிறம்,**
**அவள் சூடக் காத்திருந்ததோ!**
**அமைதியாக**

**அந்நாள் அறியா பேதை மனம்,**
**அழகாய் பட்டாடை உடுத்ததோ!**
**அவனுக்காக**

**விழுந்த முடிச்சுகளின் வீரியம் குறையவோ!**
**விரைந்தது விதி வினாவிட,அவன்**
**உயிருக்காக**

**பருவம் கொண்ட பதுமை அவள்**
**அலைவரிசை, ஓய்ந்தது வோ!**
**அவனுக்காக**

**இருளின் விழிகளில் வித்திட்ட**
**வெண்ணிற மேகமாகிறாள்.**
**விதவையாக.....!**

# தமிழ் என்று எப்படி பொருள் வந்தது தெரியுமா?

தமிழ் மொழிக்கு – தமிழ் என்று எப்படி பொருள் வந்தது என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்

க், ச், ட், த், ப், ற் – ஆறும் வல்லினம்.

ங், ஞ், ண், ந், ம், ன் – ஆறும் மெல்லினம்.

ய், ர், ல், வ், ழ், ள் – ஆறும் இடையினம்.

உலக மாந்தன் முதல் முதலில் பயன்படுத்திய உயிர் ஒலிகள் அ(படர்க்கை), இ(தன்னிலை), உ(முன்னிலை) என்பது பாவாணர் கருத்து.

தமிழின் மெய் எழுத்துக்களில் வல்லினத்தில் ஒன்றும், மெல்லினத்தில் ஒன்றும், இடையினத்தில் ஒன்றுமாக மூன்று மெய் எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்தனர்.

அவை த், ம், ழ் என்பவை.

இந்த மூன்று மெய்களுடன்,

உலகின் முதல் உயிரெழுத்துக்களை வரிசைப்படுத்தி முறையே கூட்டி&

த் + அ = ‘த’ வாகவும்,

ம் + இ = ‘மி’ யாகவும்,

ழ் + உ = ‘ழு’ வாகவும்

என்று தமிழு என்று ஆக்கி, பிறகு கடையெழுத்திலுள்ள உகரத்தை நீக்கி தமிழ் என்று அழைத்தனர்.


மொழியில் தான் அளவற்ற நுணுக்கங்கள் என்றால், பெயரில் கூடவா.. தமிழ் அதிசயம்..





# இலங்கையின் கண்டி நகரம்

கண்டி நகரம் மத்திய இலங்கையில் அமைந்துள்ள பல தேயிலை தோட்டங்களின் தாயகமாகும். இது மழைக்காடுகளால் சூழப்பட்டுள்ளது. உடவத்த கெலே சரணாலயம் நகர எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு வனப் பூங்கா ஆகும். மலைகள், மலை சார்ந்த வனாந்தரங்கள் ஆகியவற்றாலும், மகாவலி நதியின் நீரோட்டத்தினாலும் வளம் பெற்றுள்ள இந்த கண்டி மாநகரம் 15 ஆம் நூற்றாண்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையின் பிரதான மாநகரமாக விளங்கியது. பிரித்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இதுவே மன்னர் ஆட்சியின் இறுதி தலைநகரமாகவும் விளங்கியது.



இங்குள்ள தலதாமாளிகை பௌத்தர்களின் மிகவும் புனிதமான இடமாகத் திகழ்கின்றது. புத்த பெருமானின் புனித தாதுக்கள் அடங்கிய புனித பேழை கண்டி தலதா மாளிகையில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது. பௌத்த மக்களின் கௌரவத்திற்கு உள்ளாகிய புனித தலமாக இது கருதப்படுகின்றது. இதைச்சுற்றி தொல்பொருளியல் தொகுதிகளான மன்னனின் மாளிகை, பழைய நகரம் மற்றும் ஏனைய பல மாளிகைகளும் இணைந்து விரிவடைந்துள்ளன. ஏனைய தலைநகரங்களில் உள்ளதைப்போன்று இவை அழிவடையவில்லை.

அத்துடன், கண்டி நகரம் இலங்கையின் கட்டடக் கலையை இன்றும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. மரத்தில் செதுக்கப்பட்ட சித்திரங்கள், சுவர் ஓவியங்கள் என்பவை கேட்போர் கூடத்திலும் தலதா மாளிகையிலும் உதாரணங்களாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. யுனெஸ்கோ கண்டி நகரத்தை 1988ஆம் ஆண்டு உலக மரபுரிமையாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டி ஏரி நகரின் மையத்தில் உள்ளது மற்றும் வெப்பத்தில் இருந்து அமைதியான அடைக்கலத்தை வழங்குகிறது. ஏரி யைச் சுற்றி வரும் மலையேற்றப் பாதைகளும் கோயில்களும் உள்ளன.

அத்துடன் அரண்மனைத் தொகுதியுடன் இணைந்த நாத, விஸ்ணு, கதிர்காமக் கந்தன், பத்தினித் தெய்வம் ஆகிய கடவுளர்களின் ஆலயங்களும் அமைந்திருக்கின்றன. அத்துடன் மல்வத்து, அஸ்கிரிய பீடங்களும் இங்குதான் அமைந்துள்ளன. இங்கு வருடாந்தம் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இடம் பெறும் பெரஹர ஊர்வலமானது சிறப்பானது, இதனைக் கண்டு களிக்க ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் இந்த நகரத்தில் ஒன்று கூடுவர்.

கண்டி நகரத்திற்குச் சமீபமாக உள்ள லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை, அம்பெக்கே தேவாலயம் போன்ற புனித தலங்கள் தொல்பொருளியல் சான்றுகள் அடங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தலங்களாகக் கருதப்படுகின்றன. கண்டி மாநகரை அண்மித்துள்ள பேராதனை என்னும் பிரதேசத்தில் பல்கலைக் கழகம் மற்றும் தாவரவியல் பூங்கா போன்ற விசேட அம்சங்களும் இங்கு அமைந்துள்ளன.

## பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொற்கள் அனைத்துமே நியமத்தமிழில் அமைவதில்லை. அவற்றுட் சில பேச்சு வழக்கிலும் அமைகின்றன. பேச்சு வழக்கு அல்லது பேச்சு மொழி என்பது இயல்பாக உருவாகும் மொழி வடிவம் ஆகும். இது மொழியின் எழுத்து வழக்கில் இருந்து வேறுபட்டது. எந்த ஒரு சமுதாயத்திலும் பேச்சு மொழியே காலத்தால் முற்பட்டது. பல வளர்ச்சியடையாத மொழிகளில் இன்னும் பேச்சு வழக்கு மட்டுமே உள்ளதையும் காணலாம்.

பேச்சு மொழியில் பேசுவதன் பொருள் பெரும்பாலும் சூழ்நிலையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இது, பெரும்பாலான பொருள் விளக்கம் எழுத்தின் மூலமே வெளிப்படும் எழுத்து வழக்கினின்றும் வேறுபட்டது. பேச்சு வழக்கில் கூற்றின் பொருள் பட்டறிவின் வாயிலான பொது அறிவின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அதே வேளை எழுத்து மொழியில் பொருள் விளக்கம் ஓரியல்பானதும் தர்க்கரீதியானதுமான அமைப்பிலேயே தங்கியுள்ளது.

பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையிலான உறவு சிக்கலானது. தற்கால மொழியியல் துறையில், பேச்சு மொழி மனிதரின் உள்ளார்ந்த செயல்வன்மை என்றும், எழுத்து மொழி ஒரு பண்பாட்டுக் கண்டுபிடிப்பு என்றும் கருதுகின்றனர்.

# கல்விக்கதிர்



- அகரன் -

## சிகிரியா பற்றி அறிவோமா?



இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பிடம் தான் சிகிரியா. இது ஒரு பெரிய பாறை அமைப்பு, அது செதுக்கப்பட்டு அரண்மனையாக மாற்றப்பட்டுள்ளது. சிகிரியா என்பதன் பொருள் சிங்க கிரி அல்லது சிங்க பர்வதம் என்பதாகும். மலைக்குன்றின் நுழைவாயிலில் சிங்க உருவம் நிர்மாணித்திருப்பதே இந்தப் பெயர் வரக் காரணமாக அமைந்துள்ளது. சிகிரியாவின் பிரதான நுழைவாயிலின் இருமருங்கிலும் மூன்று விரல்களைக் கொண்ட இராட்சத சிங்கத்தின் பாதங்கள் காணப்படுகின்றன.

1,144 அடி உயரமான சிகிரியா கலை அம்சத்திற்கும் அதன் கட்டுமான யுக்திகளிற்கும் பெயர்பெற்ற ஓர் இடமாகும். இங்கு 500இற்கும் மேற்பட்ட குகை ஓவியங்கள் கண்ணாடி போன்ற பளிங்குகளில் வரையப்பட்டுள்ளன. இவை இயற்கையாக கிடைக்கும் தேன், சாம்பல் மற்றும் மரப்பட்டைகளை கொண்டு வரையப்பட்டன என கூறப்படுகின்றது. இவ் ஓவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருக்கும் அஜந்தா குகை ஓவியத்தின் இயல்புகளை கொண்டுள்ள இவைகளில் பல இன்னும் அழியாமல் அழகாகக் காட்சி தருகின்றது.

சுமார் ஒன்றரை தசாப்த காலமாக இங்கு அரண்மனை அமைக்கப்பட்டு ஒரு இராச்சியம் நிறுவப்பட்டு ஆண்டமையால் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய பிரதேசமாக இந்த சிகிரியா விளங்கியிருந்தது. சிகிரியா, இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. தெற்கு மற்றும் தெற்காசிய நாடுகளுள் முதலாம் ஆயிரத்தாண்டில் நிர்மாணிக்கப்பட்ட நகரத் திட்டங்களுள் மிகச் சிறந்த நகர நிர்மாணத் திட்டமாக பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிரியாக் குன்றின் இயற்கையான மனங்கவர் சுற்றுப்புறச் சூழல், சிறந்த நகர நிர்மாணத் திட்டம், அவற்றின் பேணிப் பராமரித்தல்கள் போன்ற பல காரணங்களை அடிப்படையாகக் கொண்ட மிகச் சிறந்த நகர நிர்மாணமாக இது அமைந்திருப்பதனால் ஆசியாவிலேயே மிகவும் விசேடமான படைப்பாக இது கருதப்படுகின்றது.

## ஆய்வாளர்களையே வியப்பில் ஆழ்த்தும் பிளாட்டிபஸ்



பிளாட்டிபஸ் ஆனது உலக அளவில் ஆய்வாளர்களையே வியப்பில் ஆழ்த்தும் அதிசயமான உயிரினம்.

இது வாத்தைப் போல தட்டையான அலகும், சவ்வினால் இணைந்த கால்விரல்களும், தட்டையான வாலும், உடலில் தோலும் ரோமமும், பாம்பைப்போல விஷமும் கொண்ட கலவையான உடலமைக் கொண்டுள்ள அபூர்வ விலங்கினம் .

எலிகளைப் போல மண்ணுக்குள் வளை பறித்து வாழும், மீன்களைப் போல் தண்ணீரில் மணிக்கணக்காக நீந்தி உணவுதேடும், பாம்பின் முட்டையைப் போல் மெல்லிய தோல் கொண்ட முட்டை இட்டு, பறவைகளைப் போல் அடைகாத்து, குட்டிகளுக்கு பாலூட்டும் பாலூட்டி வகையைச் சேர்ந்தது.

அவுஸ்ரேலியாவில் கிடைத்துள்ள பிளாட்டிபஸ் எலும்புக்கூடு படிமம் ஒன்று, ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பிளாட்டிபஸ் ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிலும் தாஸ்மேனியாவிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

நன்னீர் ஏரி மற்றும் ஆற்றுப்படுகைகளில் வளை தோண்டி வசிக்கும் இவை இரவு விலங்குகள். இரவு நேரம் முழுவதையும் நீரில் நீந்தியபடி உணவு உண்ணுவதிலேயே கழிக்கின்றன. நீருக்கடியில் வாழும் இறால்வகைகள், புழுக்கள் போன்றவையே இவற்றின் உணவுகள். பிளாட்டிபஸ்ஸின் தோல் இரண்டு அடுக்குகளாலானது. உடலை ஒட்டிய முதல் அடுக்கு காற்றை உள்ளுக்குள்ளேயே தக்கவைத்து வெப்பத்தைப் பேணுகிறது. இரண்டாவது அடுக்கு வெளியிலிருந்து குளிர் தாக்காமல் ஒரு காப்புறை போல செயல்படுகிறது. இதன் ரோமம் போலார் கரடியின் ரோமத்தை விடவும் மிகவும் அடர்த்தியானது.

பிளாட்டிபஸ்ஸின் ஆயுள்காலம் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும். பெண் விலங்கு முட்டையிட்டு, அடைகாத்து, குட்டிகளுக்கு பாலூட்டி வளர்க்கிறது. ஆண் பிளாட்டிபஸ்ஸின் பின்னங்கால்கள் ஒவ்வொன்றிலும் 1.5 சென்டிமீற்றர் நீளத்துக்கு ஒரு விஷமுள்ளது. பிளாட்டிபஸ்ஸின் விஷத்தால் தாக்கப்பட்டால் உடனடியாக பாம்புக்கடிக்கு செய்வதுபோலவே முதலுதவி செய்யவேண்டியது அவசியம். எதிரியைக் கொல்ல இவை இந்த நச்சுமுள்ளைப் பயன்படுத்துகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோலுக்காவும் ரோமத்துக்காகவும் இவை பெருமளவில் வேட்டையாடப்பட்டு வந்தனவாம். ஆனால் இப்போது கடுமையான சட்டங்கள் மூலம் பாதுகாக்கப்பட்டுவருகின்றன.

சிறுகதை

கேணிப்பித்தன்

# அப்பாவும் நானும்

அப்பாவை நினைத்தாலே எனது கண்களில் கண்ணீர் பொங்கும். எவ்வளவு தூரம் எங்களுக்காக உழைத்தார். நாங்கள் உயர்நிலைக்குவரவேண்டும் என்று பாடுபட்டார். எங்கள் காணியில் அழகியசிறியமண் வீட்டில்தான் வாழ்ந்தோம். வேலிஎங்கும் நிழல் தரும் மரங்கள் நின்றன. வேம்பு மரங்கள் வசந்த காலத்தில் பூத்துக் குலுங்கும். காகங்கள் பாதுகாப்பான மரங்களில் கூடுகள் அமைக்கும். குயில்கள் கூவிக் குதூகலிக்கும்.

எங்கள் துரவுக்கிணறு தண்ணீர் நிறைந்து இருக்கும். அப்பா அதிகாலையில் பெரிய இரண்டு குடங்களில் தண்ணீரை அள்ளித் தூக்கிவந்து மரக்கறித் தோட்டத்தில் இருக்கும் மரஞ்செடிகளுக்கு ஊற்றுவார். நானும் தம்பியும் அப்பாவோடு சேர்ந்து கொள்ளுவோம். எங்களுக்கென்றே சிறியகுடங்கள் இருக்கும்.

எங்களுக்குப் போட்டிவைப்பார். பின்நேரம் வரை ஈரம் காயாமல் தண்ணீர் ஊற்றினால் பரிசு கிடைக்கும். ‘தம்பி இந்தப் பூமி எங்களைக் கைவிடாது. வறட்சிக் காலத்திலும் நிலத்தடி நீரைத் நமக்குத் தரும். பயிர்களுக்கு ஊற்றினால் அவை நமக்கு உணவைத் தரும். யாரிடமும் கையேந்த வேண்டி யதில்லை. முயற்சிதான் வேண்டும். ‘அப்பா’ ஒவ்வொருநாளும் சொல்லும் அமுதவாசகங்கள்.

தினமும் பாடசாலைக்குப் போகச் சொல்லுவார். நாங்களும் பாடசாலைக்குச் செல்வோம். ஆனால் பாடங்கள் ஏறாது. அக்கறையோடு கற்பிக்கும் ஆசிரியர்கள் இல்லை. அவர்களும் பாவப்பட்ட ஜீவன்கள்தான். கிராமப் புறப் பாடசாலைகளில் பிள்ளைகளும் குறைவு. ஒருவகுப்பில் ஏழு அல்லது எட்டுப் பேர்தான் இருப்பார்கள். தினவரவு இடாப்பில் இருபது முப்பது மாணவர் பெயர்கள் இருக்கும். பொருளாதாரம் கல்விக்குத் தடையாக இருந்தது.

எங்கள் பாடசாலைக்குச் செல்லத்தம்பி என்ற தலைமை ஆசிரியர் வந்தார்.

அன்று நானும் வேளைக்கே பாடசாலைக்குச் சென்றேன். ஒருபத்து மாணவர்களைத் தன்னோடு வரும்படி அழைத்தார். எங்கள் கிராமத்தில் பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்றும் சத்தம் காற்றில் பரவி செவிகளில் வந்துபாயும். அந்த ஒலியை எங்கள் தலைமை ஆசிரியர் நின்றுகேட்டு ரசிப்பார். ஒவ்வொருவீட்டுக்கும் சென்று பெற்றோரோடு அன்பாகக் கதைத்து அவர்களின் மனங்களை வென்றார். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும்படி அறிவுறுத்தினார். மணல் செறிந்த தெருக்களில் நடப்பது உடல் நலத்துக்கு நல்லது என்பார்.

நாளுக்குநாள் பிள்ளைகளின் வரவு கூடியது. பிள்ளைகளின் கைகளில் புத்தகங்களோடு பன்னிரெண்டடி நீளமான முதிரைமரத்தின் தடிகள் இருக்கும். பாடசாலைவிட்டதும் பிள்ளைகள் வீடுகளுக்குச் சென்றுமீண்டும் பாடசாலைக்கு வந்து விடுவார்கள். கோலாட்டம், கும்மி எனப் பலவகைக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். பொழுதுபடும்வரை பிள்ளைகள் பாடசாலையில் நிறைந்திருப்பார்கள். இரவில் பெற்றோர்கள் நிறைந்திருப்பார்கள். தலைமை ஆசிரியர் உலக நடப்புக்களை விளக்கி விவாதிப்பார்.

ஒரு விழாவை ஒழுங்கு செய்தார்,கிராம மக்கள் பாடசாலையில் நிறைந்திருந்தனர்.

கலை நிகழ்ச்சிகள் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டுவிட்டன. தங்கள் பிள்ளைகள் மேடையில் ஏறி ஆடல், பாடல், நாடகம் போன்றவற்றில் ஈடுபட்டது பெற்றமனங்களை ஈர்த்துவிட்டன. தலைமை ஆசிரியர் மீதுமதிப்பும் மரியாதையும் கொண்டனர். பாடசாலைக்கு வராதபிள்ளைகளும் வரத்தொடங்கினர்.

பாடசாலை வேலிக்கு ஆளுக்கு இரண்டு கதியால் கொண்டுவரவேண்டும் என்று தலைமை ஆசிரியர் கூறினார். அடுத்த நாளே கதியால்கள் குவிந்தன. ஆசிரியர் பேர்னாட் பெரியதம்பி தலைமையில் வேலி அடைபட்டது.

எங்களுக்கு எங்கள் அப்பா வேலிக்காக அளை வெட்டுவதை பழக்கியிருந்தார். எங்கள் வேலிகளைத் திருத்தும் பழக்கம் இருந்தது. அப்பாவேலி கட்டியபின் வரிச்சுவைத்து வரிவதைப் பார்த்திருக்கிறேன். அரைவாசிமுடிந்ததும் மிகுதியை முடிக்கும்படி தருவார். செய்து முடிந்ததும் வந்து பார்த்துப் பாராட்டுவார்.

வேலியை வரிவதற்கு பால்கொடியை அப்பா கொண்டு வந்து தந்தார். பலபிள்ளைகளும் கொண்டு வந்தனர். பின்னேரங்களில் ஆசிரியர் பெரியதம்பி தலைமையில் வேலிகள் சுற்றுமதில்கள் போல் அழகாக இருந்தன.

வேலி செப்பனிட்டபின் மண்வெட்டியால் சீராக மட்டமாக வேலியோடு மண்ணை அணைத்து விட்டோம். தலைமை ஆசிரியர் பார்த்துவிட்டுப் பாராட்டினார்.

ஒருநாள் நான் பாடசாலைக்குச் செல்லாது நண்பர்களுடன் தட்டுத்துறை என்ற இடத்துக்கு நீச்சலடிக்கச் சென்றேன். பாடசாலை விட்டபின்தான் வீடுசென்றேன். அன்றுதான் எனது அப்பாவின் கோபத்தைக் கண்டேன். என்னைப் பின்னி எடுத்து விட்டார்.

‘நீங்கபள்ளிக் கூடம் போகாட்டி என்னைத்தானே ஊர் தூற்றும். அம்மா என்னை சொன்னதைச் செய்யாத மனிசன் என்று தூற்றுவர். போன இடத்தில் ஏதும் அசம்பாவிதம் நடந்தால் ஆர் பொறுப்பு? இது உங்களுக்கு சந்தோசமா?’ என்றுகேட்டுதிண்ணையில் தனிமையில் இருந்து அழுதார். அது எங்களுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. போதாக் குறைக்கு அம்மாவும் ஏசத் தொடங்கினார். எனது தவறை உணரத் தொடங்கினேன்.

இதே போல் பாடசாலையிலும் ஒருநிகழ்வு நடந்தது. அப்பொழுது நான் மூன்றாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். எனது ஆசிரியர் கணிதபாடத்தில் பெருக்கல் கற்பித்தார். ஐந்தால் பெருக்குவது மட்டும் இலகுவாக விளங்கியது. ஒருகணக்கை எழுதிவிட்டுச் செய்யும்படி விட்டார். எனக்குத் தெரியவில்லை. புரியவில்லை. நான் ஐந்தால் பெருக்கி விடையைக் காண்பித்தேன். ஆசிரியர் அந்தக் கணக்கைக் கரும்பலகையில் உள்ளவாறே எழுதிச் செய்யும்படி வற்புறுத்தினார். நான் அப்படியே செய்யாது நின்றேன். அவருக்குக் கோபம் பொங்கியது. பொறுமைக்கும் ஒரு எல்லைஉண்டாமே? நான் மசியவில்லை. பிறகென்ன? சரியானவெளுவை. நான் அழவில்லை. அடிவிழ, அடிவிழ நான் நெளிந்து நெளிந்து வாங்கிக் கொண்டேன். அத னால் ஆசிரியருக்கு மேலும் ஆத்திரம் பொங்கியது. என்னைப் பிடித்துப் பாடசாலைக் கேற்றைத் திறந்து வெளியில் தள்ளிவிட்டார். நான் இடறி வீதியில் விழப்போனேன்.

அந்தநேரம் பார்த்தா அப்பா வீதியால் செல்லவேண்டும்.? நான் பயத்துடன் எழ முயன்றேன் அப்பா என் முன்னே காட்சியாகி என்னைத் தாங்கிக் கொண்டார். பாடசாலை ஆசிரியர்களும், பிள்ளைகளும் எழுந்து நின்று வேடிக்கைபார்த்தார்கள். இன்று ஆசிரியர் பாடு அதோகதிதான். என மற்றைய ஆசிரியர்கள் ஆளையாள் பார்த்தபடிநின்றார்கள். ஆசிரியர் அப்பாவைக் கண்டுவிட்டார். அவருக்கு தைரியம் பிறந்துவிட்டது.

‘என்னபிள்ளை வளர்ப்பு? சரியான முரடனாக இருக்கிறான்.’என்றார்.

அப்பா என்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார். ‘ஐயா என்ன நடந்தது’? ஏதும் நடக்காததுபோல் அப்பாகேட்டார்.

‘சரியான முரடனாக இருக்கிறான். கணக்குப் பாடத்தில் ஒருகணக்குக் கொடுத்தேன் அவன் செய்யமறுத்து அடம்பிடிக்கிறான். கூட்டிக் கொண்டு போய் மாடுவாங்கிக் குடுங்க’ என்றார்’. அப்பா ஆத்திரத்தின் உச்சகட்டத்தில் நின்றார். ‘மாடுவாங்கிக் குடுங்க’என்றசொல் அப்பாவின் இதயத்தைத் துளைத்தெடுத்துவிட்டது. இதனைப் பின்னர்தான் அறிந்தேன்.

அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஒரு பேச்சும் இல்லை. என்னைத் தன் கையில் பிடித்தார். பக்கத்தில் கிடந்த தடியினால் அடிமேல் அடி அடிவிழுந்தது. நான் நெளிந்து, நெளிந்து அடிவாங்கியதை, நான் பட்டதுன்பத்தை ஆசிரியருக்கே பொறுக்க முடியவில்லை.

‘அவனைஅடிக்கவேண்டாம்’ என்று ஆசிரியரே என்னைப் பிடித்துக் கொண்டார். ‘டேய். அவர் குரு. அவரை நீ மதிக்கவேண்டும். அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேள்.’ – என்றார். நான் அப்பா சொன்னது போல் ஆசிரியர் காலில் விழுந்து மன்னித்துக் கொள்ளும்படிகோரினேன். மேலும் அடிவிழாமல் ஆசிரியர் என்னைத் தழுவிக் கொண்டார்.

‘ஐயா! இவன் ஒழுங்காகப் பள்ளிக்கு வருவான். சொல்லுவதைக் கேக்காட்டி கண்ணை மட்டும் விட்டு உரியுங்க தோலை’. என்றார். அன்றுதான் அப்பாவின் கோபத்தைக் கண்டேன்.

நான் ஒரு ஏழை விவசாயியின் மகன்.எனது மூன்றுவயதிலேயே அப்பாவை இழந்தேன். ஆனால் அம்மா பலஆண்டுகள் விதவையாகவே இருந்தார். எனது பாட்டனாரின் முயற்சியினால் அம்மாவின் வாழ்க்கை மீண்டும் ஒளிமயமானது. எங்களைக் காக்க கடவுளாக ஏற்றுக் கொண்டோம். எனக்கு மனத்துணிவை எனது பெற்றோர் தந்திருந்தனர். எனது குடும்பத்தின் வாழ்க்கை முறை தைரியத்தைத் தந்தது. அம்மாவின் வளர்ப்பு முறை பண்பாட்டைக் கற்றுத் தந்தது. தாத்தாவின் உழைப்பு எனக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்தது. ஆச்சியின் அன்புகலந்த பாசம் எனக்கு உலகை உணரத் தூண்டுகோலாயிற்று. அப்பாவின் கண்டிப்பான அனுபவ அறிவுசார் சிந்தனை வாழ்வைப் புரிய வைத்தது. அம்மாவினதும் ஆச்சியினதும் அன்பு கலந்த அமைதியானபார்வை ஆயிரம் யானைகளின் பலத்தைத் தந்தது.

நான் படிக்கவேண்டும் என்று ஆச்சி மிகவும் விரும்பினார். ஆச்சியின் ஆவலும் பேராசையும் எனக்குக் கல்வியில் நாட்டத்தைத் தந்தது. அந்த உந்துசக்தி அப்பாவைத் தூண்டியது. என்னை மட்டக்களப்புக்குத் துரத்தியது. என்னைப் பெற்ற தந்தை இருந்தால் கூட இப்படியான சந்தர்ப்பத்தை எனக்குச் தந்திருப்பாரா? என்று வியக்கின்றேன். அம்மாவுக்குக் கொடுத்த அந்த உறுதிமொழியை வேதவாக்காக் கொண்டு எந்தக் கஷ்டம் வந்தாலும் முகங்கொடுத்து மட்டக்களப்பில் உள்ள சிவானந்த வித்தியாலயத்தில் சேர்த்தார். விடுதியில் விட்டு மாதா மாதம் பணம் அனுப்பிக் கற்க வசதி செய்தவர் எனது அப்பா கணபதிப்பிள்ளை. நான் எத்தனை பிறவி எடுத்து உழைத்துக் கொடுத்தாலும் அவரது பேருதவிக்கு ஈடாகாது. என்றும் நன்றியோடு நெஞ்சிருக்கும் வரைநினைவு கூருவேன்.

பரீட்சையில் சித்தியடைந்ததும் வேலைதேடும் முயற்சியில் ஈடுபட்டேன், எங்கள் காணியில் மாரிகாலத்தில் கச்சான், சோளம், மரவள்ளி நடுவோம். மண்வெட்டியும் நானும் ஓயாது வேலைசெய்தோம். மழை பெய்யத் தொடங்கியது. அப்பா கூறியதுபோல் கச்சான் விதைகளையும், சோளன் விதைகளையும் நீரில் ஊறப்போட்டேன். விடிந்ததும் அப்பா சொன்னதுபோல் சிறிய அளவான பாத்தியை வெட்டி விதைகளை பாத்திகளில் போட்டு மண்ணைப் போட்டு மூடிவிட்டேன். இரண்டுநாட்களில் எல்லாம் முடிந்துவிட்டது. மழைதூறத் தொடங்கியது

எங்கள் காணிக்குள் விதைகள் நிலத்தை கிழித்து வெளியில் எட்டிப்பார்த்தன. பகலில் கோழி, காகம் உள்ளே போகவிடாது பாதுகாக்கவேண்டும். இரவில் எலி, முயல்போன்றவற்றில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

அதற்கான காவலில் ஈடுபட்டேன். அதற்குரிய குடிலைஅமைத்து இரவும் பகலும் காவலிருந்தேன்.

அப்பா அடிக்கடி வந்து திருத்தங்களைச் சொல்வார் ‘பூக்கும் காலத்தில் கச்சானுக்கு இடையில் வளரும் களைகளைக் களையவேண்டும். அதற்கு மண் அணைக்கவேண்டும் எனக் கூறிச் செய்து காட்டுவார். எங்களைச் செய்யும்படி கூறிதிருத்துவார். எங்கள் வேலையைப் பார்த்துப் போற்றுவார்.

அப்படியே வீடுசென்று குளித்தபின் உணவு உண்டோம். அம்மாவிடம் எங்கள் வேலைகளைப் பற்றிக் கூறி சந்தோசிப்பார் எனக்குவேலை கிடைத்தபோது அப்பா இல்லை. அப்பா இல்லாதது பெரிய துன்பம். இந்த நிலையாருக்கும் வரக்கூடாது. அப்பாவை பிரிந்தபின் பெரிய இடைவெளியை நிரப்ப முடியாது. ஒரு பாடசாலை அதிபராகி சேவை செய்து ஓய்வுபெற்ற பின்னும் அவரைப்போல் என்னால் வேலைகளைச் செய்யமுயாது. நினைத்துப் பார்க்கிறேன். அப்பாஅப்பாதான்.

இந்த வாரம் இவர்

# ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமை

# நீர்வை பொன்னையன்

ப்ரியமதா பயஸ்

ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமைகளில் ஒருவரும் இடதுசாரிக் கொள்கைகளில் இறுக்கமான பிடிப்புக் கொண்டவருமான நீர்வை பொன்னையன் யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாக கொண்டவர். ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பிலே தனது காலத்தைச் செலவழித்து, இயற்கை எய்தும் வரை எழுதிக் கொண்டிருந்த ஒரு சிறந்த முற்போக்கு சிந்தனையாளர். 2017 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் வழங்கிய சாகித்திய ரத்தனா விருதைப் பெற்ற பெருமைக்குரியவர்.

சிறுகதை, நாட்டார் கதை, இலக்கியக் கட்டுரைகள் நாடகங்கள் என்று ஈழத் தமிழ் எழுத்துலகிற்குப் பல்வேறு படைப்புகளைத் தந்த நீர்வை பொன்னையன், தீவிர இடதுசாரிச் சிந்தனை கொண்டவராக தன்னை அடையாளப்படுத்தியவர்.

தமிழர் தாயகமான வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் நீர்வேலியில் 1930 ஆம் ஆண்டு பிறந்த நீர்வை பொன்னையன், தமது ஆரம்பக் கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கற்றார். பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகச் சம்மாந்துறை முஸ்லிம் பாடசாலையில் கடமையாற்றியிருந்தார். அதன் பின்னர் இந்தியாவின் கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டதாரியானார்.

கொல்கத்தாவில் முற்போக்கு இடதுசாரிச் சிந்தனைகளும் தொழிலாளர் போராட்டங்களும் இவரை ஈர்த்தன. பட்டம் பெற்றுத் திரும்பியும் அவர் வேறு தொழில் எதிலும் ஈடுபடாமல் விவசாயத் தொழிலிலேயே ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தில் இடதுசாரிக் கட்சியின் முழுநேர ஊழியராகத் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினார். சிறிது காலம் கொழும்பில் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி, மீண்டும் யாழ்ப்பாணம் சென்று சமூகப் பணிகளில் ஈடுபடலானார். 1990களுக்குப் பின்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் கொழும்பில் வாழ்ந்து வந்தார்.

இலங்கை – இந்தியா ஆகிய நாடுகளில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் இடதுசாரிச் சிந்தனைகள் சீன – ரஷ்ய கம்யூனிஸ கோட்பாடுகளுடன் சேர்ந்திருந்தன. அதன் தாக்கம் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்கள் மத்தியிலும் தோன்றியது.

இலங்கையில் மாஸ்கோ சார்பு, பீஜிங் சார்பு நிலைப்பாடுகளுடன் ட்ரொஸ்கிய நிலைப்பாடுகளும் வேரூன்றியிருந்தன. இந்தக் கால கட்டங்களில் நீர்வை பொன்னையன் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்திருந்தார். ஆனால் இறுதியில் அந்த இயக்கத்திலும் பிளவுகள் உருவாகியிருந்தன.



அவ்வாறு பிளவுகள் உருவாகும் காலகட்டங்களில் நீர்வை பொன்னையன் தன்னை நிலைப்படுத்தித் தீவிர இடதுசாரித் தன்மையில் இருந்து விடுபடாது தொடர்ந்து தனது எழுத்துக்களிலும் அதன் வெளிப்பாட்டைக் காண்பித்திருந்தார்.

இவரது முதலாவது சிறுகதை 1957 ஆம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது. கவிஞர் இ. நாகராஜன் நடத்தி வந்த 'தமிழன்' என்ற பத்திரிகையில் பல சிறுகதைகளையும் இவர் எழுதினார். இவரது முதல் சிறுகதைத் தொகுதி மேடும் பள்ளமும் என்பது இது 1961இல் வெளிவந்தது. இவரது உதயம், மூவர் கதைகள், பாதை, வேட்கை, உலகத்து நாட்டார் கதைகள், முற்போக்கு இலக்கிய முன்னோடிகள், நாம் ஏன் எழுதுகின்றோம்? போன்ற நூல்கள் ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரப்பில் வரவேற்பினை பெற்றிருந்தன.

அந்தவகையில் மேடும் பள்ளமும் (1961)
உதயம் (1970)
மூவர் கதைகள் (1971)
பாதை (1997)
வேட்கை (2000)
உலகத்து நாட்டார் கதைகள் (2001)
முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் (2002)
நாம் ஏன் எழுதுகின்றோம்? (2004)
ஜென்மம் (2005)
நிமிர்வு (2009)
கால வெள்ளம் (2010)
நினைவுகள் அழிவதில்லை (2013)
உறவு (2014)

பாஞ்சான் (2016) போன்ற இவரது இலக்கியப் படைப்புகள் ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் பெரும் தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன.

இதனைவிட இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நீர்வை பொன்னையனின் சிறுகதைகள் என்ற ஒரு தொகுப்பு 2007 ஆம் ஆண்டு வெளியாகியிருந்தது.

1995 – 96 – 97 ஆகிய ஆண்டுகளில் கொழும்பில் செயற்பட்ட விபவி மாற்றுக்கொள்கைக் கலாச்சார அமைப்பின் மூலம் பொதுவுடமைக் கருத்துக்களை பரப்புவதில் நீர்வை பொன்னையன் அதிகமாக ஈடுபட்டிருந்தார்.

1962 ஆம் ஆண்டு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து தனது இலக்கியப் பணியை முன்னெடுத்த நீர்வை பொன்னையன், கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தில் பால் நிலை சமத்துவம் தொடர்பான மாநாடுகள் பலவற்றில் கருத்துரை வழங்கியிருந்தார். அந்த நிலையத்தின் பல வெளியீடுகளில் தனது ஆக்கங்களையும் எழுதியுமிருந்தார்.

பெரியாரை, சமூகச் சீர்திருத்தவாதியாக ஏற்றுக் கொண்டாலும் பெரியாரின் சில செயற்பாடுகளையும் நீர்வை பொன்னையன் விமர்சிக்கத் தவறவில்லை. 1996 ஆம் ஆண்டு பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தில் இடம்பெற்ற பெரியாரியம் என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் துணிவோடு இந்தக் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர். 1947 ஆம் ஆண்டு இடதுசாரிச் சிந்தனைகளினால் கவரப்பட்ட நீர்வை, யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டு பல போராட்டங்களிலும் பங்குபற்றியிருந்தார்.

மூத்த முற்போக்கு எழுத்தாளர்களான செ. கணேசலிங்கன், டொமினிக்ஜீவா ஆகியோர் காலத்து எழுத்தாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் நீண்ட உறவுவைக் கொண்ட நீர்வைப் பொன்னையன் தான் சேகரித்து வைத்திருந்த பெறுமதியான நூல்கள் அனைத்தையும் சங்கத்தின் நூலகத்துக்குச்தான் இறப்பதற்கு சில நாள்கள் முன் கையளித்திருந்தார். 2020 மார்ச் மாதம் 26 ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் நீர்வை பொன்னையன் இயற்கை எய்தினார்.

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
கிளை நிறுவனங்கள் :-

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P: 021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P.<br>021 221 5472<br>070 301 3012 |

# வாழ்க்கையில் அயல்வீடு எவ்வளவு முக்கியம் ?



அந்தக் கிராமத்தில் ஒரு ஏழை விவசாயி இருந்தான். அவனுக்கு பக்கத்துவீட்டில்ஒருவேட்டைக்காரன் இருந்தான்.

வேட்டைக்காரனிடம் அவன் வேட்டைக்குபயன்படுத்தும்வேட்டை நாய்கள் சில இருந்தன.

வேட்டைக்காரனின் நாய்கள் அடிக்கடி வேலி தாண்டி சென்று விவசாயியின் ஆட்டுக்குட்டிகளை துரத்துவதும் கடித்து குதறுவதும ாக இருந்தன.

இதனால் கலக்கமுற்ற விவசாயி தன் அண்டைவீட்டுக்காரனான வேட்டைக்காரனை சந்தித்து அப்பா உன் நாய்களை கொஞ்சம் பார்த்துக்கொள். அவை அடிக்கடி என் பகுதிக்கு வந்து ஆடுகளை தாக்குகின்றன. காயப்படுத்துகின்றன என்றான். வேட்டைக்காரன் அதை சட்டைசெய்யவேயில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காக அவை எந்த பயனும் இன்றி போனது.

ஒரு முறை நாய்கள் இதே போல வேலி தாண்டி வந்து பட்டிக்குள் புகுந்து பல ஆட்டுக்குட்டிகளை கடித்துக் குதறின.

இந்த முறை இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று மீண்டும் வேட்டைக்காரனிடம் புகார் செய்ய சென்றான் விவசாயி.

வேட்டைக்காரன் இந்த முறை சற்று கோபத்துடன், இதோ பார் ஆட்டை துரத்துறது கடிக்கிறது இதெல்லாம் நாயோட சுபாவம். அதுக்கெல்லாம் நான் ஒன்னும் செய்யமுடியாது. உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ என்றான்.

இதைத் தொடர்ந்து ஊர் பஞ்சாயத்து தலைவரை சென்று சந்தித்த விவசாயி, வேட்டைக்காரனின் நாய்களால் தான் படும் துன்பத்தை எடுத்துக்கூறி, அவன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

முன்பொரு முறை பஞ்சாயத்து தலைவரின் மகளை ஒரு சிறிய விபத்திலிருந்து விவசாயி காப்பாற்றியிருப்பதால் பஞ்சாயத்து தலைவருக்கு விவசாயி மீது பெரும் மதிப்பு உண்டு.

விவசாயிக்கும் வேட்டைக்காரனுக்கும் இடையே உள்ள பிணக்கை பற்றி விசாரித்து தெரிந்துகொண்ட பஞ்சாயத்து தலைவர், என்னால் பஞ்சயாத்தை கூட்டச் செய்து அந்த வேட்டைக்காரனை தண்டித்து, அபராதம் விதித்து அவன் நாய்களை கட்டிப்போடச் செய்ய முடியும்.

ஆனால், நீ தேவையின்றி இதனால் ஒரு எதிரியை சம்பாதிக்க நேரிடும். உனக்கு அது சொந்த வீடு. அவனுக்கும் அது சொந்த வீடு. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் தினசரி பார்க்கவேண்டும். அப்படி யிருக்கையில் பக்கத்துவீட்டுக்காரன் நண்பனாக இருப்பதில் உனக்கு விருப்பமா அல்லது எதிரியாக இருப்பதில் விருப்பமா?

பஞ்சாயத்து தலைவர் சொல்வதில் உள்ள யதார்த்தத்தை புரிந்து கொண்ட விவசாயி, அண்டை வீட்டுக்காரனை ஒரு நண்பனாக பார்ப்பதில் தான் தனக்கு விருப்பம் என்றான்.

சரி உன் ஆட்டுக்குட்டிகளும் பத்திரமாக இருப்பது போலவும் அவனும் உன் நண்பனாக இருப்பது மாதிரியும் நான் ஒரு தீர்வைசொல்கிறேன் கேட்பாயா?

நீங்கள் எதைச் சொன்னாலும் கேட்கிறேன் அடுத்து பஞ்சாயத்து தலைவர் சில விடயங்களை அவரிடம் சொன்னார்.

வீட்டுக்கு வந்த விவசாயி பஞ்சாயத்துதலைவர்தன்னிடம் சொன்ன வியங்களை பரீட்சித்து பார்க்க முற்பட்டான்.

தனது பட்டியில் இருக்கும் ஆட்டு குட்டிகளிலேயே மிகவும் அழகான இரண்டு குட்டிகளை எடுத்துச் சென்று, வேட்டைக்காரனின் இரண்டு மகன்களுக்கும் தலா ஒரு குட்டி வீதம் விளையாட பரிசளித்தான்.

குழந்தைகளுக்கு தாங்கள் விளையாட புதிய தோழர்கள் கிடைத்ததில் ஒரே குஷி. இருவரும் அந்த குட்டிகளுடன் விளையாடி மகிழ்ந்தார்கள்.

தன் குழந்தைகளின் புதிய தோழர்களை பாதுக்காக்க, தற்போது வேட்டைக்காரன், நாய்களை சங்கலியில் கட்டிப்போட வேண்டியிருந்தது. யாரும் சொல்லாமலே அவன் நாய்களை சங்கிலியால் பிணைத்தான்.

தனது மகன்களுக்கு விவசாயி ஆட்டுக்குட்டிகள் பரிசளித்ததை தொடர்ந்து பதிலுக்கு அவனுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்பி, தான் காட்டிலிருந்து கொண்டு வந்த சில அரிய பொருள்களை பரிசளித்தான் வேட்டைக்காரன்.

ஆக இருவருக்குள்ளும் நல்லுறவு வளர்ந்து நாளடைவில் நல்ல நண்பர்களாகிவிட்டனர்.

மேற்கூறிய கதை அன்றாடம் பலருக்கு நடப்பது தான். பிரச்சினை தான் வேறு வேறு. நம்மிடம் நியாயம் இருக்கிறது என்பதற்காகவோ, நம்மிடம் வலிமை இருக்கிறது என்பதற்காகவோ வீணாக எதிரிகளை சம்பாதித்துக்கொள்ளக்கூடாது. ஆடுகள் முக்கியம் தான் ஆனால் அதைவிட மனஅமைதி முக்கியமல்லவா?

ப்ரியமதா பயஸ்

# திருமணம் செய்யாத ஆண்கள்



ஆண்களில் இரு வகை உண்டு திருமணத்தில், அந்த பந்தத்தில் விருப்பம் இல்லாதவர்கள்.

அடுத்தது விருப்பம் உண்டு, ஆனால் திருமணம் ஆக ஏதோ தடை உடையவர்கள் அல்லது வாய்ப்பு இல்லாதவர் அல்லது வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள்.

இதில் விருப்பம் இல்லாதர்களைப் பற்றி சொல்ல ஏதுமில்லை.

திருமணத்தில் விருப்பம் உண்டு, ஆனால் ஆகாதவர்கள் பரிதாபத்திற்குரியவர்களே!

திருமணம் ஆகாததற்கு உடல், அழகின்மை காரணங்கள் இருக்கலாம்.பொருளாதாரக் காரணங்கள் இருக்கலாம்.

குடும்ப சூழ்நிலை காரணமாக இருக்கலாம். எதுவானாலும் விருப்பம் இருந்து, ஆகாதவர்கள், அதிலும் பாலுறவில் அதிக நாட்டமிருந்து பூர்த்தியாகாதவர்கள் படும்பாடு

பலநேரங்களிலும் சிடுசிடென்று இருப்பார்கள் (easily irritable).

உலகத்தின்மீதே வெறுப்புள்ளவர்கள் உண்டு.

நண்பர்களுடனும், உறவினர்களுடன் பழகுவதில் விருப்பமில்லாதவர்களாக இருப்பவர் உண்டு. (aloof)

இன்னொரு நேர்மாறான குணமுடையவர்களும் உண்டு – காமத்தைப் பற்றி அதீதமாக, நேரிடையாகவோ, மறைபொருளாக, பேசுவதில் – அதீத விருப்பமுடையவர்களாக இருப்பார்கள்.

நிறைவேறாத ஆசைகளே இத்தகைய மனநிலைகளுக்கு, இயல்புகளுக்கு, நடவடிக்கைகளுக்குக் காரணமாக அமையலாம். ஆகவேதான் இணையரை தேர்வுசெய்து வாழச்சொல்லி காலம்காலமாக மதங்களும் மார்க்கங்களும் அறிவுரை சொல்கின்றன.

# தாழ்வு மனப்பான்மையை போக்குவது எப்படி?

தாழ்வு மனப்பான்மை உருவாவது ஏன்? என்னால் முடியாது என்று நினைப்பதை முதலில் உதறித் தள்ளுங்கள். பின் வரும் சில எளிமையான வழிகளை முயற்சி செய்து பாருங்கள்.

1. முதலில் நீங்கள் யாரை விட தாழ்ந்தவராக உணர்கிறீர்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள்

2. உங்கள் உணர்வுகளின் காரணத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்

3. நாம் அனைவரும் சில வழிகளில் தாழ்ந்தவர்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

4. மற்றவர்களைப் போல இருக்க விரும்புவதை நிறுத்துங்கள்.

5. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கவலைப்படுவதை நிறுத்துங்கள்.

**தாழ்வு மனப்பான்மையின் அறிகுறிகள்:**

பாதுகாப்பின்மை மற்றும் குறைந்த சுயமரியாதை.

உங்கள் இலக்குகளை அடைய இயலாமை, அல்லது மாட்டிக்கொண்டது போன்ற எண்ணம் எளிதில் விட்டுவிட அல்லது விட்டுக்கொடுத்து விட விரும்புவது.

சமூக சூழ்நிலைகளில் பின்வாங்க வேண்டிய அவசியத்தை உணர்தல் . பெரும்பாலும் உங்களை நீங்களே உணர்கிறீர்கள்.

கவலை மற்றும் மனச்சோர்வை அனுபவித்தல்.

ஆங்கிலத்தில் மற்றவர்கள் போல உரையாட முடியாத நிலைமை.

வயது வித்தியாசம் பார்க்காமல், நன்றாக படித்து வேலையில் இருப்பவர்களோடு பழக்கம் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

வெகு விரைவில் நீங்கள் விரும்பும் உயரத்தினை எட்டுவதற்கு உங்களாலும் முடியும்.



# விவசாயி



# பப்பாசியில் மாவுப்பூச்சியின் (Mealy bug) தாக்கத்தை கட்டுப்படுத்தல்

பொதுவாக பப்பாசி வருடம் முழுவதும் விளைச்சல் தரக்கூடிய பயிர் ஆகும். எவ்வாறாயினும் வெப்பநிலை கூடும் போதோ குறையும் போதோ உற்பத்தி குறையும். இது பொதுவாக வீட்டுத் தோட்டத்தில் செய்கை பண்ணப்படுகின்றது. பப்பாசிப் பயிர் பலவகைப்பட்ட மண்ணிலும் வளரக்கூடியது. எனினும் களிமண் பயிர் செய்ய உகந்ததல்ல. சற்றே வெப்பம் அதிகமாக நிலவும் இடங்களில் நன்கு வளரும். மலைப் பகுதிகளில் சுமார் 1, 200 மீற்றர் உயரம் வரை வளரும். நல்ல வடிகால் வசதி இருப்பதன் மூலம் தண்டுப் பகுதியில் ஏற்படும் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.



**நிலம் தயாரித்தல்:–** நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது சமப்படுத்தி கொள்ள வேண்டும். பின்பு 2.5 மீற்றர் x 2.5 மீற்றர் இடைவெளியில் 45 செ.மீ. நீளம், 45 செ.மீ. அகலம் மற்றும் 45 செ.மீ ஆழத்தில் குழிகள் தயாரிக்க வேண்டும். பின்பு குழிகளில் மண் மற்றும் மாட்டெரு நிரப்பி நாற்றுக்களை குழியின் மத்தியில் நடவேண்டும்.

ஒரு ஹெக்டேயருக்கு 500 கிராம் விதைகள் போதுமானவை.

500 கிராம் விதைக்கு 50 கிராம் றைக்கோடோமா கொண்டு விதை நேர்த்தி செய்யவேண்டும். நேர்த்தி செய்த விதைகளை உக்கிய மாட்டைரு மற்றும் மண் நிரப்பிய பாலித்தீன் பைகளில் ஒரு செ.மீ ஆழத்தில் விதைகளை இடவேண்டும். ஒரு பொலித்தீன் பையில் நான்கு விதைகளை விதைக்கவேண்டும். பிறகு பைகளை நிழல்படும் இடத்தில் வைத்து பூவாளி கொண்டு தண்ணீர் ஊற்றவேண்டும். நாற்றுக்கள் 60 நாள்களில் நடுக்கைக்குத் தயாராகிவிடும்.

பெரியளவில் பயிற்செய்கை மேற்கொள்ளும் போது வைரஸ் தாக்கம் மற்றும் மாவுப்பூச்சியின் தாக்கம் விவசாயிகளுக்கு பெரிய சவாலாக உள்ளது. மாவுப்பூச்சி நாற்றுப்பருவத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்

### மாவுப்பூச்சியால் நாற்றுப்பருவத்தில் ஏற்பட்ட தாக்கம்

மாவுப்பூச்சி (Mealy bug) ஒரு வகை செதில் பூச்சியாகும். இது ஈரமான மற்றும் வெப்பமான காலநிலையில் வாழக்கூடியது. தாவரச்சாற்றை உறிஞ்சி உணவாக உட்கொள்ளக் கூடியது. மாவுப் பூச்சி இனிப்பான பதார்த்தத்தை சுரப்பதால், எறும்பு ஒன்றிய வாழ்வு முறையை பின்பற்றி இவற்றை காவிச் செல்லும். இதனால் இவை பப்பாசியில் காய் மற்றும் பழங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்

**கட்டுப்பாட்டு முறை: –**

1. அழுத்தமாக நீரைத் தெளித்து மாவுப்பூச்சியை கழுவுதல்.

2. ஈயக்கூடிய பொலித்தீனை 1 – 2 அடி உயரத்தில் இறுக்கமாக கட்டுதல்.

3. பொலித்தீன் மேல் கிறீஸ் பூசுதல் வேண்டும். (மரத்தண்டில் கிறீஸ் படாதவாறு பூசுதல் வேண்டும்.

இவ்வாறான முறைமூலம் எறும்பு மாவுப் பூச்சியை கொண்டு செல்வதை தடுக்கலாம்.

* சோற்றுக் கரைசலை பயன்படுத்தல் 1:10 எனும் வீதத்தில் அதாவது 5 லீற்றர் நீரில் 500 கிராம் சோறை கலந்து 10 நாள்கள் காற்றின்றிய நிலையில் நொதிக்க வைத்தபின் கரைசலை வடித்து மாவுப்பூச்சியுள்ள பகுதிகளில் நேரடியாக தெளித்தல் வேண்டும்.

இவ்வாறான முறைகளைப் பயன்படுத்தி இயற்கை முறையில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

ஆக்கம்: –
பிரியதர்ஷினி பன்னீர்ச்செல்வம்
பிரதி அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார் மடம்.












ந.லோகதயாளன்

# மீண்டும் இங்கிருந்து தமிழகத்துக்கு அகதிகள் பயணம்?

போர்க்காலத்தில் அரச படைகளுக்கு அஞ்சி உயிரைக்காக்க தமிழகம் ஓடிய மக்கள் இன்று அரசின் பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பவும் தாய்த் தமிழகத்தை நாடும் அவலத்திற்கு தள்ளப்படுகின்றனர்.

இலங்கையில் ஏற்படும் விலை அதிகரிப்பினால் தினமும் பொருள்களின் விலை கட்டுப்பாடு இன்றி உயர்வதனால் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாது திணறும் மக்கள் மீண்டும் தமிழகத்திற்கு தப்பிச் செல்கின்றனர் என செய்திகள் அரசல்புரசலாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் வட புலத்தே மன்னார் மற்றும் யாழ். மாவட்டங்களின் பேசாலை, வங்காலை, மாதகல் மக்களே அதிகம் தப்பிச் செல்கின்றனர். இப் பகுதிகள் கடற்கரையோர பிரதேசங்களாக இருப்பதனால் இலகுவில் தப்பிச் செல்ல முடிகின்றது. இம் மாதத்தின் இதுவரையான நாள்களில் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுள்ளன என்று கூறப்படுகின்றது.

1990, 1995, 2006 ஆம் ஆண்டுகளில் ஈழப் போராட்டம் காரணமாக அரச படைகளின் தாக்குலிற்கு அஞ்சி இடம்பெயர்ந்த மக்கள் இந்தியாவில் குடும்பமாக தங்கியிருந்தனர். அவர்களில் பலர் சொந்த ஊர், வீடு வளவு, உறவுகள் மற்றும் உடைமைகளை கருதி விமானம் மூலமும் படகுகள் வழியாகவும் தாயகம் திரும்பினார்கள். தற்போது அவர்களில் சிலர் மீண்டும் இரகசியமான முறையில் படகுகளில் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரையில் செலவு செய்து இந்தியாவிற்கு பயணிக்கின்றனர். இவ்வாறு பயணிப்பவர்கள் தமிழகத்தின் அகதி முகாம்களுக்கு அன்றி ஏற்கனவே தங்கியிருந்த இடங்களிற்கே நேரடியாகவே செல்கின்றனர்.

இதேநேரம் இந்தியாவில் தங்கியுள்ள பலர் தமது உறவுகளைத் தாயகத்தில் இருந்து அழைத்துச் செல்லும் நோக்கில் படகு வழியாக மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு இரகசியமாக வருகை தருகின்றமையும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதார நிலைமையை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் வல்லமை இந்த அரசிற்கு கிடையாது என்று நம்பும் மக்கள் ஐவர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு ஒரு லட்சம் ரூபா போதுமானதாக இல்லை என்கின்றனர். இதே நேரம் இந்தியாவில் வசிப்பதானால் 15 ஆயிரம் ரூபா நிறைவான வாழ்வாதாரத்திற்குப் போதுமானதாகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையின் பொருளாதார நிலைமை ஒரு ஸ்திரத்தை தற்போது எட்டும சாத்தியம் தென்படவில்லை. அல்லது பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் திறன் ஆளும் அரசிடம் காணப்படவில்லை. அதனால் இவ்வாறு தமிழகம் தப்பிச் செல்லும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கவே செய்யும் என்றே பல படகோட்டிகள் கூறுகின்றனர். தம்மை அணுகும் பலர் தங்களைக் கடல் வழியாக இந்தியாவிற்கு அனுப்பி வைக்குமாறு உதவி கோருகின்றனர் எனவும், கடற்படையினரின் கண்காணிப்பு எல்லை தாண்டும் சமயம் இந்திய கரையோர காவல் படையால் கைது செய்யப்படக்கூடிய நிலைமையை சுட்டிக காட்டியே தாங்கள் மறுக்கின்றோம் எனவும் உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் மன்னார் மாவட்டம் ஈச்சளவக்கை பகுதியில் இருந்து 2006ஆம் ஆண்டு படகு மூலம் தப்பிச் சென்று தமிழகத்தில் வசித்து, போர் முடிவுற்ற பின்பு 2017 ஆம் ஆண்டு தாயகம் திரும்பிய ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

எமது உறவுகள் தற்போதும் தமிழகத்திலேயே வாழ்கின்றனர். நானும் எனது குடும்பமும் 11 ஆண்டுகள தமிழகத்தில் வாழ்ந்த அனுபவம் உண்டு. இந்த நிலைமையில் இலங்கையில் வாழ்வதற்கு நாள் ஒன்றிற்கு மூவாயிரம் ரூபா போதாமல் உள்ளது. இதுவே இந்தியாவாக இருந்தால் மாதம் 10 ஆயிரம் ரூபாவுடன் வாழ முடியும். அதாவது எமது நாட்டின் நான்கில் ஒரு பகுதிப் பணம். இது இன்றைய நிலைமை. இன்னும் எந்தப் பொருள் என்ன விலை வரும் என்ற திடமான முடிவும் வருவதாக இல்லை.

எனவே இவ்வாறான நிலைமையில் தினமும் செத்துச் செத்து வாழ்வதனைவிடவும் ஒரு நாள் சிரமப்பட்டு மீளத் தமிழகம் செல்வதனைத் தவிர வேறு வழியேதும் தெரியவில்லை. – என்கிறார். தயவு செய்து என் படத்தையோ பெயரையோ வெளியிடாதீர்கள் என்றும் கூறுகிறார்.

இதேநேரம் கடந்த 2022.03.17 அன்று இரவு மன்னாரில் இருந்து இரு படகுகளில் பலர் தமிழகம் தப்பிச் சென்றுவிட்டனர் எனத் தகவல் வெளியானமையை அடுத்து மன்னார் மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் இரு நாட்டு புலனாய்வாளர்களும் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர். இதன் போது 4516, 4529 இலக்க படகுகளிலேயே பலர் தப்பிச் சென்றனர் என 18ஆம் திகதி அதிகாலை முதல் தேடுதல் இடம்பெற்றது. இருந்தபோதும் இரு பக்கத்திலும் எவருமே கைது செய்யப்படவோ அல்லது படகுகள் கண்டுபிடிக்கப்படவோ இல்லை. இந்நிலையில் 18ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் இந்தியத் திசையில் இருந்து ஒரு படகு மன்னாரை நோக்கி வருவதனை கடற்படையினர் அவதானித்து மடக்கினர். அதில் 174கிலோ கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். அந்த படகின் இலக்கம் மறைத்து 'சலோற் ரேப்' ஒட்டப்பட்டுக் காணப்பட்டது. சலோற் ரேப்பை அகற்றிய போது 4516 என்ற பதிவு இலக்கம் தென்பட்டது.

ஒரு படகு கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 4529 இலக்கப் படகு இரு பக்கங்களிலும் கண்டு பிடிக்கப்படவில்லை என்கின்றனர் சம்பந்தப்பட்டோர்.

கஞ்சாவுடன் பிடிபட்ட படகிலும் மன்னாரில் இருந்து மக்கள் ஏற்றிச் செல்லப்பட்டனரா, அவ்வாறாயின் எத்தனை பேர் சென்றனர் என்பது தொடர்பாகவும் உறுதி செய்யப்படவில்லை. இவ்வாறு சர்வ சாதாரணமாக இலங்கையில் இருந்து இந்தியா சென்று கஞ்சாவை ஏற்றிக் கொண்டு வரும் நிலைமையில்தான் இரு நாட்டினதும் பாதுகாப்புச் சேத்துவம் உள்ளது என்பதும் இதன் மூலம் உறுதியாகியுள்ளது.



# சுபமுகூர்த்தக் கணிப்புகளில் பஞ்சாங்கத்தில் பெரும் தவறுகள்

## - கௌசிகர் -

சுப முகூர்த்தங்களில் சுப கருமங்களைச் செய்யும் எமது சமூகத்தில் விவாகரத்து, விதவைக்கோலம் போன்ற சீரழிவுகள் நடப்பது ஏன்? நவக்கிரகங்கள் பிழை விடு

**இணைப்பு 4 காலப்பிரகாசிகை விவாக முகூர்த்தத்திற்கு 8ம் இடம் சுத்தம் என்று விதி இல்லை**

8-ம் இடத்தில் சூரியன், செவ்வாய், சனி இவர்கள் இருத்தல் நல்லது மற்றவர்கள் இருக்க அசுபம் உண்டு.

கின்றனவா? இல்லை. அவை தமது தொழிலைச் சரியாகவே செய்கின்றன. முகூர்த்தத்திற்குரிய பலனையே செய்கின்றன. பஞ்சாங்கத்தில் உள்ள சுப முகூர்த்தங்களே பல சமயங்களில் பிழையானவை.

வாக்கிய பஞ்சாங்க விவாக முகூர்த்தங்களில் கண்டபடி பிரீதி போடப்பட்டுள்ளது. பிரம்மஸ்ரீ வெ.இரகுநாதையர் அவர்களே, பிரீதி என்றால் கடையில் வாங்கும் ஒரு விளையாட்டுப் பொருள் என்று நினைக்கிறீர்களா? சரியாகப் பிரீதி குறிப்பதற்கு விவாக சுப முகூர்த்த விதிகள் நன்கு தெரியுமா?

ஜாதகம் கணிப்பது போன்று, முகூர்த்த நாளின் கிரக நிலையைக் குறித்து முகூர்த்த லக்கினத்தைக் கணிக்க வேண்டும். கிரக நிலையில் விவாகத்திற்கு 7 ஆம் இடம், வீடு குடிபுகுதலுக்கு 12 ஆம் இடம்.... இவ்வாறு சுப கருமங்கள் ஒவ்வொன்றிக்கும் எத்தனையாம் இடத்தில் கிரகங்கள் எதுவும் இல்லாது வெற்றிடமாக, சுத்தமாக இருக்க வேண்டும் என்று விதி உள்ளது. இது ஸ்தான

21 பிழையான விவாக சுப முகூர்த்தங்கள் உள்ளன. இந்த விவரங்கள் இணைப்பு 5 இல் உள்ளன. இது போன்ற 30, 40 விவாக முகூர்த்தப் பிழைகள் உள்ள வாக்கிய பஞ்சாங்கங்கள் பல தசாப்தங்களாக வெளி வருகின்றன. பிரம்மஸ்ரீ வெ. இரகுநாதையர் அவர்களே, காலப்பிரகாசிகையும் விதானமாலையும் பிழை என்று நிரூபித்து 2022 வாக்கிய பஞ்சாங்க விவாக சுபமுகூர்த் தங்களில் பிழைகள் இல்லை, துஷ்ட பவன்கள் நிகழாது என்று நிரூபிக்க முடியுமா?

யாழ் பஞ்சாங்கங்கள் 8ஆம் இடம் சுத்தம் என்ற விதியையே சகல கரும முகூர்த்தங்களுக்கும் பின்பற்றினார்கள். இது பிழை. இதனால் பல சிறந்த சுப முகூர்த்தங்களைத் தவற விட்டனர். இது மட்டுமல்ல, ஒவ்வொரு கருமத்திற்கும் விசேடமாகச் சொல்லப்பட்ட ஸ்தான சுத்த விதிகளைப் பின்பற்றவில்லை. இதனால் மிகக் கொடிய தோஷம் உள்ள பிழையான பல முகூர்த்தங்களைக் குறித்தனர். ஆரம்ப காலத்திலிருந்தே யாழ் பஞ்சாங்கங்கள் இப்பிழையை விட்டன. இதனைத் திருத்துமாறு கடந்த காலத்தில் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. திருக்கணிதத்தினர் திருந்தி விட்டனர். வாக்கியத்தினர் தமிழ் சமூகத்தைத் தொடர்ந்து சீரழிப்போம், திருந்த மாட்டோம், இயலும் என்றால் பண்ணிப்பார் என்ற நிலையில் உள்ளனர்.

வாக்கியத்தில் 21 மலடி, விதவை, விபச்சாரி...... மரண பலன் விவாக சுப முகூர்த்தங்கள் உள்ளன.

மாலை 05:38 கும்ப லக்கின விவாக சுப முகூர்த்தத்தில் சந்திரன் கன் னியில் 8இல் உள்ளது. 8ஆம் இடம் சுத்தம் என்ற விதியைச் சகல கரும முகூர்த்தங்களுக்கும்

**இணைப்பு 3 பிரம்மஸ்ரீ இ.சி. இரகுநாதையர் எழுதிய விதானமாலை விவாக சுப முகூர்த்த விதி**

சுபக்கோளாயினும் பாபக்கோளா
யினும் ஏழாமிடத்தில் நிற்கில் ஆகா எ-று. (29)

பொல்லாவிடங்களினிற்கும் கிரகதோஷபலாதம்

விலைமகள்கங்கன் வியாழந் துறமகள் வெய்யவனேல்
மலமுறு கைம்பெண் குசன்றுட்டை நீலன்மலடிமிடி.
தலைமகடிங்க டிருவினிமால் சாவிநோ யரவ
நிலையுறவான்பிணி நின்ற நிலைக்கு நிமைகளே.

இ-ள்: விசேஷித்துப் பொல்லாதென்றவிடங்களில் நின்ற கிரகங்களால்வரும் தீமைகளாவன: சுக்கிரன் நிற்கில் பரத்தை, வியாழன் நிற்கில் துறவி, ஆதித்தன் நிற்கில் விதவை, செவ்வாய் நிற்கில் துஷ்டை, சனிநிற்கில் மலடி, சந்திரன் நிற்கில் தரித்திரி, புதன்நிற்கில் திருவினி, இராகுநிற்கில் மரித்தல், கேதுநிற்கில் வியாதியாம் எ-று.

பின்பற்றும் வாக்கிய பஞ்சாங்கத்தில் இப்பிழை எப்படி வந்தது? முகூர்த்தம் கணிக்கும் போது கிரக நிலையில் சந்திரனைச் சரியாகக் குறிக்கத் தெரியாததால் ஏற்பட்ட

### சுபகிருது வருஷ சுபமுகூர்த்தங்கள் 79

**விவாகம்**

ஆண்களுக்கு 21, 23, 25 ஆகிய ஒற்றித்த வயதிலும் பெண்களுக்கு 16, 18, 20 ஆகிய இரட்டித்த வயதிலும் விவாகம் செய்வது உத்தமம்.

**இணைப்பு 5 மிகக் கொடிய பலனுள்ள இரகுநாதையர் வாக்கிய பஙசாங்க விவாக முகூர்த்தங்கள்**

| ஆங்கிலத் தேதி | மாதம் | தேதி | வாரம் | காலம் | நா. வி. முதல் | நா. வி. வரை | ம. மி. முதல் | ம. மி. வரை | லக்கினம் | பிரீதி | விவாக முகூர்த்த பலன் - மிகப் பெரிய தோஷ பலன்கள் மட்டும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21-04-2022 | சித்தி | 8 | வி | இர | 30-40 | 34-27 | **6-17** | **7-48** | துலாம் | சூ, ச, ரா, கே | 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → மத நிந்தகி, 7ல் ராகு → ஏழ்மை |
| 11-05-2022 | சித்தி | 28 | பு | மா | 26-30 | 31-30 | **4-30** | **6-30** | துலாம் | சூ, ச, ரா, கே | 6ல் சுக் → மரணம், 7ல் சூரி → விதவை, 7ல் புத → மத நிந்தகி, 7ல் ராகு → ஏழ்மை |
| 12-05-2022 | சித்தி | 29 | வி | மா | 27-38 | 31-21 | **4-57** | **6-26** | துலாம் | சூ, ச, ரா, கே | 6ல் சுக் → மரணம், 7ல் சூரி → விதவை, 7ல் புத → மத நிந்தகி, 7ல் ராகு → ஏழ்மை |
| 20-05-2022 | வைகா | 6 | வெ | பக | 9-50 | 11-10 | *9-48* | *10-20* | கடகம் | சனி, கேது | 7ல் சனி → மலடி |
| 01-06-2022 | வைகா | 18 | பு | பக | 7-53 | 13-02 | *9-01* | *11-05* | கடகம் | சனி, கேது | 7ல் சனி → மலடி |
| 09-06-2022 | வைகா | 26 | வி | பக | 6-35 | 11-44 | *8-30* | *10-34* | கடகம் | சனி, கேது | 7ல் சனி → மலடி |
| 16-06-2022 | ஆனி | 2 | வி | பக | 31-14 | 36-24 | **6-23** | **8-27** | தனு | சூரிய, சனி | 7ல் சூரியன் → விதவை |
| 23-06-2022 | ஆனி | 9 | வி | பக | 4-09 | 9-18 | *7-34* | *9-37* | கடகம் | சூரிய, சனி | 7ல் சனி → மலடி |
| 06-07-2022 | ஆனி | 22 | பு | கா | 1-55 | 3-35 | *6-44* | *7-24* | கடகம் | சூரிய, சனி | 7ல் சனி → மலடி |
| 08-07-2022 | ஆனி | 24 | வெ | மா | 27-26 | 32-36 | **4-56** | **7-00** | தனு | சூரிய, சனி | 6ல் சுக்கிரன் → மரணம், 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → மத நிந்தகி |
| 21-08-2022 | ஆவ | 5 | ஞா | பக | 5-00 | 9-13 | *8-05* | *9-46* | கன்னி | சூரி, ரா, கே | 7ல் வியாழன் → அடங்காப்பிடாரி |
| 29-08-2022 | ஆவ | 13 | தி | மா | 28-53 | 33-05 | **5-38** | **7-19** | கும்பம் | சூரிய, சனி | 6ல் சுக்கிரன் → மரணம், 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → மத நிந்தகி |
| 01-09-2022 | ஆவ | 16 | வி | கா | 2-41 | 7-27 | *7-09* | *9-04* | கன்னி | சூரி, ரா, கே | 7ல் வியாழன் → அடங்காப்பிடாரி |
| 05-09-2022 | ஆவ | 20 | தி | பக | 2-02 | 3-35 | *6-54* | *7-31* | கன்னி | சூரி, ரா, கே | 7ல் வியாழன் → அடங்காப்பிடாரி |
| 05-09-2022 | ஆவ | 20 | தி | மா | 27-45 | 30-07 | **5-41** | **6-28** | கும்பம் | சூரி, சுக், சனி | 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → மத நிந்தகி, 7ல் சுசுகிரன் → விபச்சாரி |
| 07-09-2022 | ஆவ | 22 | பு | பக | 1-42 | 3-35 | *6-45* | *7-30* | கன்னி | சூ, சு, ரா, கே | 7ல் வியாழன் → அடங்காப்பிடாரி |
| 12-09-2022 | ஆவ | 27 | தி | கா | 0-54 | 3-35 | *6-25* | *7-29* | கன்னி | சூ, சு, ரா, கே | 7ல் வியாழன் → அடங்காப்பிடாரி |
| 12-09-2022 | ஆவ | 27 | தி | பக | 26-37 | 30-49 | **4-42** | **6-23** | கும்பம் | சூரி, சுக், சனி | 7ல் சூரியன் → விதவை, 7ல் புதன் → மத நிந்தகி, 7ல் சுசுகிரன் → விபச்சாரி |
| 30-10-2022 | ஐப்பசி | 13 | ஞா | பக | 8-36 | 11-07 | *9-29* | *10-30* | தனு | செவ், சனி | 7ல் செவ்வாய் → விபச்சாரி |
| 10-02-2023 | தை | 27 | வெ | பக | 5-01 | 9-07 | *8-34* | *10-13* | மீனம் | சுக், ராகு, கே | 7ல் சந்திரன் → தரித்திரி |
| 27-03-2023 | பங்கு | 13 | தி | பக | 17-49 | 22-58 | **1-22** | **3-25** | கடகம் | செவ், சனி | 7ல் சனி → மலடி |

சுத்த விதி எனப்படும். இதனை மீறுவது மிகப் பெரிய தோஷம். இத்தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்ய முடியாது. இவ்விதியை மீறினால் மிகக் கொடிய பலன்கள் நிகழும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தமிழகத்துப் பாம்பு வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ள ஸ்தான சுத்த விதி இணைப்பு 1 இல் உள்ளது.

ஸ்தான சுத்த விதிகளை யாழ். பஞ்சாங்கங்கள் பின்பற்றுவதில்லை. பிரம்மஸ்ரீ வெ. இரகுநாதையர் அவர்களே, ஸ்தான சுத்த விதி பிழையானது, அதனைப் பின்பற்றக் கூடாது என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா?

விவாகத்திற்கு 7ஆம் இடம் சுத்தம் என்ற விதியும், இதனை மீறினால் நிகழும் பலனும் சாஸ்த்திரங்களில் உள்ளன. காலப்பிரகாசிகையில் இருப்பது இணைப்பு 2இல் உள்ளது.

முன்னர் வாக்கிய பஞ்சாங்கம் கணித்த பிரம்மஸ்ரீ இ.சி. இரகுநாதையர் எழுதிய விதானமாலையில் இருப்பது இணைப்பு 3 இல் உள்ளது. 2022 வாக்கிய பஞ்சாங்கத்தில் 7 ஆம் இடம் சுத்தம் என்ற விதியை மீறிய

சகல கரும சுப முகூர்த்தங்களுக்கும் 8ஆம் இடம் சுத்தமாக இருக்கவேண்டும்என்றொருவிதிசாஸ்த்திரங்கள் எதிலும் இல்லை. பிரம்மஸ்ரீ வெ. இரகுநாதையர் அவர்களே, இவ்விதி சாஸ்த்திரங்களில் இருப்பதை ஆதாரமாகக் காட்ட முடியுமா? விவாக சுப முகூர்த்தத்தில் 8 இல் சூரியன், செவ்வாய், சனி இருப்பது நல்லது என்று காலப் பிரகாசிகையில் இருப்பது இணைப்பு 4இல் உள்ளது. இதில் மாங்கல்யம் அணிபவர்களுக்கு விவாக முகூர்த் தத்தில் 8இல் செவ்வாய் இருக்கக் கூடாது. ஏனையோருக்கு 8இல் செவ்வாய் இருக்கலாம். விவாக முகூர்த்தத்தில் 8இல் சுக்கிரன். ராகு, கேது போன்றவையும் இருக்கலாம். விவாக முகூர்த்தத்தில் 8இல் சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் போன் றவை இருக்கக் கூடாது.

கும்பாபிஷேகத்திற்கு 8ஆம் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். மீறினால் குருக்களும் தர்ம கர்த்தாவும் மரணம். திருக்கணிதத்தில் 06 - 07 - 2022 மிதுன லக்கின நேரத்தில் தேவப்பிரதிஷ்டை முகூர்த்தம் குறித்து விட்டு அச்சுப் பிழையாகக் கன்னி லக்கினம் என்று குறித்துள்ளனர். இதனைக் கொப்பியடித்த வாக்கியத்தினர் 06.07.2022ல் கன்னி லக்கின நேரத்தில் தேவப்பிரதிஷ்டை முகூர்த்தம் குறித்து விட்டு அதனைச் சிங்க லக்கினம் என்று குறித்துள்ளனர். அன்று சிங்கத்திற்கு 8 இல் குரு, கன்னிக்கு 8இல் செவ்வாய். இவ்விரு லக்கி னங்களிலும் தேவப்பிரதிஷ்டை முகூர்த்தம் இல்லை, மரண பலன்.

வாக்கியத்தில் உள்ள 29.08.2022

பல பிழைகள் வாக்கியத்தில் உள்ளன. பிரம்மஸ்ரீ வெ.இரகுநாதையர் அவர்களே, கிரக நிலையைச் சரியாகக் குறிக்கத் தெரியுமா? இது சோதிடத்தில் பாலர்

**இணைப்பு 2 காலப்பிரகாசிகை விவாக முகூர்த்தத்தில் 7ல் கிரகங்கள் இருக்கக்கூடாது. மீறினால் நிகழும் துற்பலன்கள்**

7ஆமிடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது. விவாஹ லக்னத்திற்கு 7ல் இருக்கும் கிரஹங்களின் பலன்களைத் தனியாகக் கூறுகிறேன்.

குரு 7ல் இருந்தால் புருஷனை அவமதிப்பாள். 7ல் சந்திரன் இருந்தால் பெண் துஷ்டசீலையாவாள் (துஷ்டை), 7ல் புதன் இருந்தால் துஸ்சீலை. செவ்வாய் இருந்தால் வியபிசாரி. சனி இருக்க குழந்தைகளுக்கு மரணம். கேது இருந்தால் மனமயக்கம் உடையவளாவாள். சூரியன் இருக்க வைதவ்யம் நேரும். ராகு இருந்தால் தரித்திரத்தன்மை ஏற்படும். சந்திரன் இருந்தால் எல்லா துக்கங்களையும் அளிப்பான். ஆகையால் 7ல் கிரஹம் எதுவும் இருத்தல் நல்லதல்ல.

பாடம். இதனைப் படித்த பின்னரே பஞ்சாங்கம் கணிக்க வர வேண்டும்.

இக்கட்டுரைக்குத் தகுந்த பதிலளிக்க வேண்டியது வாக்கிய பஞ்சாங்க கணிதர் பிரம்மஸ்ரீ வெ. இரகுநாதையரது கடமை. அவர் பதிலளிக்காவிடில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது மத அமைச்சரது மூத்த ஆலோசகர் இளைப்பாறிய பிரதம நீதியரசர் கௌரவ உயர்திரு. க.ஸ்ரீபவன் அவர்களது கடமை.

ந(ப)ஞ்சாங்கத்தை நாம் அழிக்காவிடில் அது நம்மை அழித்துவிடும்.

வாழ்க வளமுடன்.

**இணைப்பு 1 தமிழகத்து பாம்பு பஞ்சாங்க ஸ்தான சுத்த விதி**

ஸ்தான சுத்தம் முக்கியம் பார்க்கவேண்டியவை.

நிஷேகத்தில் முகூர்த்த லக்னமும், கிருஷியாரம்பத்திற்கு 3-மிடமும், வித்யாரம்பத்திற்கு 4-மிடமும் யாத்திரைக்கு, 5-மிடமும், கோடியுடுப்பதற்கு 6-மிடமும், விவாகத்திற்கு 7, -மிடமும், உபநயனத்திற்கு 8-மிடமும், சௌளத்திற்கு 9-மிடமும், அன்னப்பிராசனத்திற்கு 10-மிடமும், சிரார்த்தத்திற்கு 11-மிடமும், நாமகரணம், கிரகப் பிரவேசித்திற்கும், 12-ம் இடம் சுத்தம் அவசியம் பார்க்கவும்.

காலைக்கதிர் Kalaikkathir

# லிற்றோ எரிவாயு நிறுவனத்தை 3 மாதத்தில் மூட நேரிடலாம்!

லிற்றோ எரிவாயு நிறுவனத்தை இன்னும் மூன்று மாதங்களில் மூட நேரிடலாம் என லிற்றோ எரிவாயு நிறுவனத்தை பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது இறக்கப்பட்டு வரும் எரிவாயு கப்பல் மூலம் மாத்திரம் நிறுவனத்துக்கு 20 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாள்களில் வரும் கப்பல் மூலம் 20 கோடி ரூபாவுக்கும் மேல் நஷ்டம் ஏற்படுவது நிச்சயம் என லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் விளம்பர முகாமையாளர் பியல் கொழும்பஹெட்டிகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள லிற்றோ எரிவாயு நிறுவனத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். 12.5 கிலோ கிராம் ஓர் எரிவாயு கொள்கலனுக்கு 4, 462.25 ரூபா செலவிடப்படுவதுடன் அது அது தற்போது 2 ஆயிரத்து 675 ரூபாவுக்கு சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக நஷ்டத்தை ஈடுசெய்ய 12.5 கிலோ கிராம் எரிவாயு கொள்கலனின் விலையை மேலும் 2 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டும். தொடர்ந்தும் நஷ்டத்தில் எரிவாயுவை விநியோகித்தால், அடுத்த மூன்று மாதங்களில் நிறுவனத்தை மூட நேரிடும்.

இதனால், நாட்டில் எஞ்சி இருக்கும் ஒரே எரிவாயு நிறுவனத்தைப் பாதுகாக்க ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொழும்பஹெட்டிகே கூறியுள்ளார்.

லிற்றோ நிறுவனம் 2021ஆம் ஆண்டு முதல் மக்களுக்கு மானிய விலையில் எரிவாயுவை வழங்கி வருவதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் ஆயிரத்து 100 கோடி ரூபா இழப்பை சந்தித்துள்ளது. இந்த ஆண்டில் இது வரை 100 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், நிறுவனத்தின் நிதி நிலைமை மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் கொழும்பஹெட்டிகே தெரிவித்துள்ளார்.



# பங்களாதேஷ் செல்கின்றனர் மட்டக்களப்பு கபடி வீரர்கள்!

பங்களாதேஷ் நாட்டில் இடம்பெற்றுவரும் 'பங்கபந்து இன்ரநேஷனல்' கபடி போட்டியில் பங்கேற்பதற்காக தேசிய கபடி அணிக்காக தெரிவாகியுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த கபடி வீரர்களான எல்.தனுஜன், ஏ.மோகனராஜ், எல்.அனோஜ், ராசோ வென்சி ஆகிய நான்கு வீரர்களும் பங்களாதேஷ் நோக்கி பயணமாகியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டித் தொடரில் விளையாடுவதற்காகவே குறித்த நான்கு வீரர்களும் தேசிய அணி சார்பாக பங்களாதேஷ் நோக்கி பயணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள், எரிவாயு பெற முன்னுரிமை?

சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள், எரிவாயுவை பெற்றுக்கொடுப்பதில் முன்னுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எரிபொருள் மற்றும் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு அறிவிக்குமாறும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

# இறக்குமதி செய்யும் பால்மாவின் விலை 600 ரூபாவால் அதிகரிப்பு!

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 400 கிராம் பால்மா பொதி ஒன்றின் விலை 260 ரூபாவாலும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலை 550 முதல் 600 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

அதன்படி ஒரு கிலோகிராம் பால் மா பொதியின் புதிய விலை சுமார் 1, 845 ரூபாவாக இருக்கலாம் என்றும் 400 கிராம் பக்கெட்டின் விலை 800 ரூபாவாக இருக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அதிகரிப்பு தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பால் மாவின் விலையை அதிகரிப்பது தொடர்பில் இன்னும் இரண்டு நாள்களில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# மண்ணெண்ணெய்க்காக 2 கிலோ மீற்றர் வரிசையில் காத்திருந்த பெண் மயக்கம்

இலங்கையில் மண்ணெண்ணெய்க்காக 2 கிலோமீற்றர் நீளமான வரிசையில் காத்திருந்த பெண்ணொருவர் மயக்கமடைந்துள்ளார். குறித்த பெண்ணுக்கு அதே வரிசையில் காத்திருந்த மற்றுமொருவர் முதலுதவி செய்வது போன்ற படம் தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றது.

# 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் கட்டாயம் பெறவேண்டும்

நாட்டிலுள்ள 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டிருந்தால் மாத்திரமே முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொற்றுநோயியல் பிரிவின் பிரதம நிபுணரான வைத்தியர் சமிந்த கினிகே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் பொது இடங்களுக்குள் பிரவேசிப்பவர்களுக்குத் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டுவிலில் பொருளாதார மத்திய நிலையம் இன்று பிரதமர் மஹிந்தவால் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம் மட்டுவில் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது. விவசாயிகள் தமது உற்பத்திகளைத் தகுந்த விலையில் விற்பனை செய்வதற்கும் நுகர்வோர் குறைந்த விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் 20 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இந்த விசேட பொருளாதார மத்திய நிலையம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10 மணியளவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் சீந்திர ராஜபக்ஷ, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.என்.றணசிங்க உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு இன்றையதினம் வருகை தந்தமையுடன் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தீர்வுக்கான திசை மார்க்கமும் கலந்துரையாடலும்

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்தியக் குழுவின் ஏற்பாட்டில் இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தீர்வுக்கான திசைமார்க்கமும் என்ற தலைப்பிலான பகிர்வுக் கருத்துரைகளும் கலந்துரையாடலும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பி.ப.3.30 மணிவரையில் இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தோழர் த.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் விசேட உரைகளை மூத்த பொதுவுடமைச் செயற்பாட்டாளரும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளருமான தோழர் சி.கா.செந்திவேல், கட்சியின் வட பிரதேச செயலாளர் தோழர் செல்வம் கதிர்காமநாதன் மற்றும் கட்சியின் வன்னி மாவட்டங்களின் செயலாளர் தோழர் என்.பிரதீபன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர் அழைப்பு விடுக்கின்றனர்.

# வடக்கு பனங்கள்ளை ஏற்றுமதி செய்ய முயற்சி

பனங்கள்ளு வடக்கில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகத்துறை சம்பந்தமான கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

தற்போதைய சூழ்நிலையில் வர்த்தக துறை அமைச்சு நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து ஏற்றுமதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஓர் ஏற்றுமதியை செயற்படுத்துவதற்கான கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டு அதனை செயற்படுத்தத் தயாராக உள்ளோம்.

அதன் ஓர் அங்கமாக பனங்கள்ளு உற்பத்தி கிராமம், பனங்கட்டி உற்பத்தி கிராமம், கடலட்டை உற்பத்தி கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் ஏதாவது எமது அமைச்சுக்கு கிடைக்கப்பட்டால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்கத் தயார். தற்போது நமது நாட்டுக்கு ஏற்றுமதி கட்டாயம் தேவையானது.

குறிப்பாக நுவரெலியாவில் கோப்பி, தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வடக்கில் இருந்து ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது. எனவே, வடக்கில் இருந்து பனங் கள்ளை தயார் செய்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜபக்ஷ அரசுக்கு சர்வதேசம் உதவாது

## அடித்துக் கூறுகின்றார் சஜித்



**கொழும்பு, மார்ச் 20**

**'நாட்டை எப்படி ஆள்வது எனத் தற்போதைய ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் கொரோனாவைக் காரணம் காட்டுகின்றனர்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நெருக்கடியான காலகட்டத்தில்கூட கொள்ளையடிப்புகள் நிறுத்தப்படவில்லை. வெள்ளைப்பூடு முதல் சீனி வரை அனைத்து விடயங்களிலும் மோசடிகள் அரங்கேறியுள்ளன. எனினும், கொரோனாவைக் காட்டி அனுதாபம் திரட்டுவதற்கு ஆளுங்கட்சியினர் முற்படுகின்றனர். தமது இயலாமையை மூடிமறைக்கப் பலதும் செய்கின்றனர்.

ஆனால், தமக்கு முடியாது என்பதை ஆட்சியாளர்கள் ஏற்கனவே நிரூபித்துவிட்டனர். சர்வதேசத்தை நாடமுடியாது. நாடினால் உதவியும் கிடையாது.

எனவே, நாட்டைக் கட்டியெழுப் பக்கூடிய தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும். அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். சம்பளம் உட்பட எந்தவொரு வரப்பிரசாதங்களையும் வாங்காமல் சிறந்த வழிகாட்டலை வழங்குவேன். - என்றார்.

# அரசை பதவி விலகக் கோரி 23ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டம்



அரசுக்கு எதிராக மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தை தேசிய மக்கள் சக்தி, எதிர்வரும் 23ஆம் திகதி நுகேகொடையில் நடத்தவுள்ளது.

'மக்கள் சக்தியின் எதிர்ப்பு' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஜே.வி.பி. உட்பட தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும், அமைப்புகளும் பங்கேற்கவுள்ளன.

இதன்போது அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தப்படவுள்ளது.

அத்துடன், தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு எதிராகவும் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

### நல்லூரில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எங்களுடைய நிலத்திலே வந்து தமிழினத்துக்கு எதிராக நடவடிக்கைகளைச் செய்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாட்டுக்கு வருவதாக ஏற்பாடாகி இருக்கின்றது. தமிழின அழிப்பை மேற்கொண்டிருக்கக்கூடிய மஹிந்த ராஜபக்ஷ எங்களுடைய மண்ணுக்கு வருவதை முற்றுமாக எதிர்க்கின்றோம்.

இதற்காக நாளை (இன்று) காலை 10 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் எங்களுடைய உறவுகள் எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாக ஒன்றுகூடுமாறு நாங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இன்றைய இந்தக் காலகட்டத்தில் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்திலேயே எங்களுடைய மரபுவழித் தாயகமான வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணி அபகரிப்புகள் மிகவும் இரகசியமாக வேகமாக நடைபெற்று வருகின்றன.

தொல்பொருள் திணைக்களம், வன இலாகாதிணைக்களம் என அனைத்துமே மக்களுடைய காணிகளை அபகரிப்பு வருகின்றன.

எங்களுடைய காணிகளை அபகரித்து சிங்கள க் குடியேற்றங்களை முன்னெடுக்கின்ற திட்டம் இடம்பெற்று வருகின்றது.

பௌத்தமயமாக்கல் என்ற திட்டத்தில் இன்றும் (நேற்றும்) கூட கந்தரோடையில் விகாரை அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு ஏற்பாடாகி இருக்கிறது.

இவ்வாறு ஒவ்வொரு இடங்களிலும் விகாரைகளை அமைத்து தமிழர்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த வழிபாட்டு இடங்கள் எல்லாம் பௌத்த மதஸ்தலங்களாக மாற்ற எடுக்கின்ற முயற்சிகளை ஏற்க முடியாது.

தென்னிலங்கையிலே எங்கு சென்றாலும் எதிர்ப்பு இருக்கக்கூடிய சூழலில் எங்கும் போக முடியாமல் எங்களிடம் வந்து தஞ்சம் புகுந்து அரசியல் நடத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இன அழிப்புக்கு எந்த நீதியையும் வழங்காமல் எங்களையும் அனைவரையும் சர்வதேசத்தை ஏமாற்றிக்கொண்டு இப்படி ஒரு இனப் படுகொலையைச் செய்திருக்கக்கூடிய அரசியல்வாதி எங்களுடைய நிலத்தில் காலடி எடுத்து வைக்க முடியாது. அனைத்து மக்களும் இதனை உணர்ந்து இந்த எதிர்ப்பை வெளியிட வேண்டும்.

அரசியல் கட்சித் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், மாணவர் அமைப்புகள் மகளிர் அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்புகள், பொதுமக்கள், இளைஞர் மன்றங்கள் என அனைத்துத் தரப்பினரும் நாளை (இன்று) காலை 10 மணியளவில் நல்லூர் முன்றலில் ஒன்றுகூடி ஒட்டுமொத்த எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் இந்தப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கி நிற்கின்றது - என்றார்.

### புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாய்க்கு பிளாஸ்ரர் ஒட்டப்பட்ட நிலையில் இருந்தனர் என பின்னர் தப்பித்த அந்த மாணவன் தகவல் தெரிவித்துள்ளான்.

அந்த மாணவன் வனப்பகுதி ஒன்றுக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது வானில் இருந்து தப்பி ஓடிய நிலையில் அடிகாயங்களுடன் உறவினர்களால் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டான். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறான்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### முகப்புத்தகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிராமத்தினர், பொலிஸார் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று மாலை புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் இருவரும் மீட்கப்பட்டுள்ளார்கள்.

சிறுமிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பல திடுக்கிடும் விடயங்கள் வெளிவந்துள்ளன. அந்தச் சிறுமி களில் ஒருவர் 'பேஸ்புக்' ஊடாக மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதி இளைஞர் ஒருவருடன் காதல் தொடர்பை ஏற்படுத்தி யுள்ளார்.

அந்த இளைஞன் சிறுமியை மட்டக்களப்புக்கு வருமாறு அழைத்துள்ளமையைத் தொடர்ந்து சிறுமி தனது நண்பியுடன் வீட்டில் மாலைநேர கல்விக்கு செல்வதாக சொல்லிவிட்டு சைக்கிளில் புறப்பட்டிருக்கின்றார். சைக்கிளை பற்றைக் காட்டிற்குள் போட்டுவிட்டு பஸ்ஸில் ஏறி மட்டக்களப்பு செங்கலடிக்கு சென்றுள்ளார்கள்.

செங்கலடி இளைஞன் இருவரையும் காரில் ஏற்றிச்சென்று, தான் பேசிய சிறுமியுடன் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளமையைத் தொடர்ந்து, அவர்களை வீடுசெல்ல அழைத்துக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பஸ்ஸில் ஏற்றிவிட்டுள்ளான்.

இரண்டு சிறுமிகளும் யாழ்ப்பாணம் சென்று யாழ் நகரப்பகுதியில் சுற்றித்திரிந்த வேளையில் கடை ஒன்றில் பொருள்களை வாங்கிய போது நள்ளிரவாகியுள்ளது.

இரண்டு சிறுமிகளுக்கும் உதவிசெய்வதாக கூறி இரண்டு இளைஞர்கள் சிறுமிகளை அழைத்துக் கொண்டுசென்று வீடு ஒன்றில் தங்கவைத்து, மற்றைய சிறுமியுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு பஸ்ஸில் இரண்டு சிறுமிகளும் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளனர். இரண்டு சிறுமிகளும் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வந்திறங்கியுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பில் இரண்டு சிறுமிகளின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளமையைத் தொடர்ந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட, இருவரும் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இருவரிடத்திலும் பெறப்பட்ட வாக்குமூலத்தினை தொடர்ந்து இரண்டு சிறுமிகளும் மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகள் இருவருடனும் பாலியல் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

### 'மொட்டு' அரசுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, அரசில் அங்கம் வகிக்கும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க முடிவு செய்துள்ளனர். இவர்கள் அடுத்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்து தமது முடிவு குறித்து ஜனாதிபதி அறிவிக்கத் திட்டமிட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.